# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report

**2015**




**ඉදිකිරීම් කර්මාන්ත සංවර්ධන අධිකාරිය**
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
**Construction Industry Development Authority**

**නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය**
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
**MINISTRY OF HOUSING & CONSTRUCTION**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.0* | *நோக்கு ……………………………………………………………………………* | *1* |
| *2.0* | *செயற்பணி ……………………………………………………………………* | *1* |
| *3.0* | *நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்.....* | *1* |
| *4.0* | *பிரதான நோக்கங்கள்…………………………………………………….* | *1* |
| *5.0* | *தாபனம்………………………………………………………………….....* | *2* |
| *6.0* | *பிரிவுச் செயற்பாடுகள்……………………………………………………* | *5* |
| *6.1* | *ஆலோசனை சேவைகள் பிரிவு …………………………………………* | *6* |
| *6.2* | *அபிவிருத்திப் பிரிவு ……………………………………………………* | *09* |
| *6.3* | *மின் எந்திரவியல் சேவைப் பிரிவு ………………………………….* | *14* |
| *6.4* | *பயிற்சிப் பிரிவு ……………………………………………………* | *24* |
| *6.5* | *மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு ……………………………….* | *35* |
| *6.6* | *நிதிப் பிரிவு ……………………………………………………………* | *43* |

# நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)

## 1.0 நோக்கு

''உலக தரங்களுக்கு அமைவாக இலங்கையில் நம்பகமான மற்றும் திறமையான நிர்மாண கைத்தொழிலை உருவாக்குதல்''

## 2.0 செயற்பணி

''ஒரு தேசிய நிர்மாண கொள்கை அடிப்படையில் தொழில்முறையான சேவைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடுகள், திறன் விருத்தி, அபிவிருத்தி மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலையான தேசிய அபிவிருத்திக்கு நிர்மாண கைத்தொழில் மூலோபாய தலைமைத்துவத்தை வழங்குதல்.''

## 3.02014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

தலைப்பு'' நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் நோக்கங்களையும் பின்வருமாறு பிரதிபலிக்கிறன:-

இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் வளர்ச்சியை நேக்காகக் கொண்டு பதிவு நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றை தரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாண வேலைகளுக்கான தேசிய ஆலோசனைக் குழுவை நிறுவுவதற்கும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியம் என்பவற்றை நிறுவுவதற்கும் தொழில் சார் நிபுணர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்ததாரர்கள், மற்றும் கைவினைஞர்களின் முன்னேற்றம் மற்றும் நன்மைக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான சர்ச்சைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் இலங்கையில் நிர்மாணக்கைத்தொழில், பொதுமக்கள் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புற்ற விடயங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காகவும் அமைக்கப்பட்ட ஒரு சட்டம்''

## 4.0பிரதான நோக்கங்கள்

### CIDA வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு

- கௌரவ அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய நிர்மாண தேசிய கொள்கையை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்காளர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.
- அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் நிர்மாணக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களின் பதிவை புதுப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்.
- ஆற்றல் மிக்க கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் வளர்ச்சிக்கு எந்த விடயங்களில் ஆராய்ச்சி, பிரச்சாரம்,ஆய்வுப் பணிகள் மற்றும் வெளியீடுகள் தேவைப்படுகின்றனவோ அவற்றை ஊக்குவித்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில்சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;
- நிர்மாணக்கைத்தொழில் தொடர்பாக அதிகாரசபையினால் இயற்றியுள்ள நடவடிக்கை முறைகள், விதிகள், செயல்முறைகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை செயல்படுத்தல்.

நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை(CIDA) தனது பணியினை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ) கைத்தொழில் சேவைகள் பிரிவு

ஆ) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

இ) நிர்மாண இயந்திர சாதன சேவைகள் பிரிவு

ஈ) பயிற்சிப் பிரிவு

சட்டத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கி உரிய கால எல்லைக்குள் அவற்றை செயற்படுத்த கூட்டிணைக்கப்பட்ட திட்டம் தயார் செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்துடன் 2016 - 2021 ஆம் ஆண்டு வரைக்கான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

கால இலக்குகள் வகுக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகள் பற்றியும் அவை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் பற்றியும் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் விவரமாக தரப்பட்டுள்ளன.

**5.0 தாபனம்**

**அறிமுகம்**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) பதில் நிறுவனமாக 2014ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. முகாமைத்துவ குழுவின் தவிசாளரினால் இந்த நிறுவனம் தலைமை வகிக்கப்படுகின்றது.

**முகாமைத்துவக் குழு**

| | பெயர் மற்றும் முகவரி | பதவி | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1 | பொறி. சி.எச்.டி. திசேரா<br>605, டிசிங்க மாவத்தை,<br>பெலவத்த,<br>பத்தரமுல்ல | தவிசாளர் | 2015.02.09 |
| 2 | திரு ஜி. வன்னிநாயக்க<br>சட்ட வழக்கறிஞர்<br>17/3, பிரிவென வீதி<br>பொரலஸ்கமுவ | உறுப்பினர் | 2015-03-04 |
| 3 | திரு பி.பி.எஸ்.சி. நோனிஸ்<br>பணிப்பாளர் - பொது நிதித் திணைக்களம்<br>கொழும்பு 01 | உறுப்பினர் | 2015.2.27 |
| 4 | பேராசிரியர் (திருமதி) சித்ரா வெடிக்கார<br>இல 31, ஆல்பர்ட் பிளேஸ்,<br>தெஹிவளை | உறுப்பினர் | 2015.02.09 |
| 5 | பட்டய அளவீட்டாளர் ஹேமந்த அபோன்சு<br>இலக்கம் 45 / பி, பாடசாலை ஒழுங்கை,<br>நாவல | உறுப்பினர் | 2015-02-09 |
| 6 | பொறி. எல்.டபிள்யூ. பாலித<br>பணிப்பாளர் (நகர் குடியிருப்பு)<br>வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,<br>“செத்சிறிபாய“<br>பத்தரமுல்ல. | உறுப்பினர் | 2015.02.16 |
| 7 | கலாநிதி கலீல் காசிம்<br>இல 16, அனுலா வீதி,<br>கொழும்பு 06. | உறுப்பினர் | 2015.02.16 |
| 8 | மேஜர் ரஞ்சித் குணதிலக்க<br>நிர்வாகப் பணிப்பாளர்<br>சன்கென் லங்கா (பிரைவேற்) லிமிடெட்<br># 295, மாதம்பிட்டி வீதி,<br>கொழும்பு 14. | உறுப்பினர் | 2015.2.16 |
| 9 | பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ. ஜயவர்த்தன<br>துணை வேந்தர்<br>மொரட்டுவ பல்கலைக்கழகம்<br>கடுபெத்த,<br>மொரட்டுவ. | உறுப்பினர் | 2015.03.09 |

| | | | |
|---|---|---|---|
| 10 | பொறி. ஜே.கே.லங்காதிலக்க<br>கூட்டிணைக்கப்பட்ட பொறியாளர்கள் நிறுவனம் இலங்கை.<br>27 பீ, உடுமுல்லை வீதி<br>பத்தரமுல்ல.<br><br>14, ஷேடி கல்லறை அவென்யூ<br>கொழும்பு 08. | உறுப்பினர் | 2015.11.20 |
| 11 | திரு ருக்ஷான் ஜயவர்தன<br>இல 55, பிளவர் வீதி<br>கொழும்பு 07. | உறுப்பினர் | 2015.02.16 |
| 12 | திரு ரஞ்சி ஹேவகே<br>இலங்கை தேசிய நிர்மாண சங்கம்<br>"இதிகிரீம் மெதுர", 350ஏ, பன்னிபிட்டிய வீதி,<br>பெலவத்த,<br>பத்தரமுல்ல. | உறுப்பினர் | 2015.11.20 |
| 13 | பொறி. எச்.பி.ஆர். குணவர்தன<br>இலங்கை பொறியியலாளர் ஆலோசனை சங்கம்,<br>415, பௌத்தாலோக்க மாவத்தை,<br>கொழும்பு 07. | உறுப்பினர் | 2015.11.20 |
| 14 | பொறி. கே.பி.ஐ.யூ. தர்மபால<br>இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம்<br>120/15<br>விஜேராம மாவத்தை,<br>கொழும்பு 07. | உறுப்பினர் | 2015.11.20 |

முகாமைத்துவ பணபணிப்பாளர் சபையினது தவிசாளரின் தலைமைத்துவத்தின் கீழ் CIDA தனது பணியினை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ) ஆலோசனைப் பிரிவு

ஆ) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு


இ) நிர்மாண இயந்திர சாதன சேவைகள் பிரிவு

ஈ)பயிற்சிப் பிரிவு

தவிசாளரின் பொதுவான உத்தரவுக்கு உட்பட்ட வகையில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தினது ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவர். நிருவாக விடயங்கள் நிர்வாக விடங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் நிதிசார் அலுவல்கள் நிதி விடயங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் செயற்பாட்டுப் பிரிவுகளாக இயங்குகின்றன. (பிரிவுகளின் செயற்பாடுகளைக் காட்டும் அட்டவணையைத் தயவு செய்து பார்க்கவும்).

## 6.0 பிரிவுச் செயற்பாடுகள்

**நிறுவனக் கட்டமைப்பு**
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)**



## 6.1ஆலோசனை சேவைகள் பிரிவு

தொழிற்துறை சேவைகள் பிரிவு ஒப்பந்த முகாமைத்துவம், நிர்வாகம், ஆலோசனை,திட்ட முகாமைத்துவ சேவைகள் மற்றும் ஒப்பந்தப் சர்ச்சைகளுக்கான தீர்வுகள் தொடர்பான ஆலோசனை சேவைகள் வழங்குவதற்கான தேவைகளை அடையாளங்காணுவதுடன் அவற்றை முறைமைப்படுத்துகின்றது.

ஆலோசனை சேவைகள் பிரிவு, 2015 ஆண்டில் அதன் பங்குதாரர்களான பின்வரும் தொழிற்துறையினருக்கு அதன் சேவைகளை வழங்குகியது. (அதாவது ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள்,போன்ற)

- 6.1.1 ஆலோசனை சேவைகள், பிணக்குத் தீர்மானம் மற்றும் ஒப்பந்த விடயத்தில் மத்தியஸ்தம்வகிக்கும் தீர்ப்பாளர்களுக்கு நியமனம் வழங்குதல்.
- 6.1.2 கருத்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்குதல்.
- 6.1.3 நிர்மாண புள்ளியியல் தகவல் புத்தகத்தை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்.
- 6.1.4 CIDA வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்
- 6.1.5 நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்துதல்.
- 6.1.6 தொழில்நுட்ப கணக்காய்வு நடைமுறையை நிறுவுதல் மற்றும் தரமான முகாமைத்துவ கணக்காய்வாளர்களுக்கு தேவையான தகைமைகளை தயாரித்தல். (நிறைவடையவில்லை)
- 6.1.7 தகுதி உடையவர்களின் பதிவேடொன்றை "அடையாளம் காணப்பட்ட நிர்மாண பணிகள்" தொடர்பாக பராமரித்தல் (நிறைவடையவில்லை)

**1. ஆலோசனை சேவைகள், பிணக்குத் தீர்மானம் மற்றும் ஒப்பந்த விடயத்தில் மத்தியஸ்தம் வழங்கும் தீர்ப்பாளர்களுக்கு நியமனம் வழங்குதல்.**

கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறு மீதான தீர்மானம்,CIDA சூத்திரமுறை,CIDA நியம கூறுவிலை ஆவணங்களின் விவரக்கூற்றுக்கள் ஆகியவை தொடர்பான அறிவுரைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது. இந்த இலவச சேவைகள் பிரிவுக்கு 2015 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் எனப் பலரும் கோரிக்கைகளை முன்வைத்தனர். சம்பந்தப்பட்ட தரப்பினரால் கோரப்பட்ட விடயங்களுக்கு 360 க்கும் மேற்பட்ட ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. விசேடமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலங்கை மின்சார சபை, மற்றும் இலங்கை சிறு கைத்தொழில் சபை என்பனவற்றுக்கு விசேட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பந்ததாரர்களின வேண்டுகோளுக்கு அமைய 2015 ஆம் ஆண்டு 15 தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தீர்பாளர்களின் பெயர் பட்டியல் CIDA இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**2. கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்**

அரசாங்க நிறுவனங்கள் அவர்களது கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை இந்தப் பிரிவிடம் கோரின. அதற்கமைய கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்தல்,கூறுவிலைகளை மதிப்பீடு செய்தல், ஒப்பந்த நிருவாகம், உள்ளக கொடுப்பனவு சான்றிதழ்களை தயாரித்தல் போன்ற விடயங்களுக்கான அறிவுரைகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டன.

கருத்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்கப்பட்ட பிரதான நிறுவனங்களின் பட்டியல் பின்வருமாறு

- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களம்

- இலங்கை கைவிணைச் சபை
- இலங்கை தேசிய திறைப்படக் கூட்டுத்தாபனம்
- ஆயுர்வேத வைத்தியசாலை கைத்தடி
- அரசாங்க அச்சகத் திணைக்களம்
- இலங்கை மின்சார சபை - இரத்திணபுரி
- இலங்கை சுற்றுலாத்துறை

3. **நிர்மாணப் புள்ளிவிபரங்களின்** CIDA **விவரத்திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல்**

மாதாந்தம் வெளியிடப்படும் CIDA நிர்மாணப் புள்ளிவிபரங்களின் விவரத்திரட்டுக்கள் வெளியிடப்பட்டன. இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், சரீர உழைப்பு வேதனங்கள், பொறிகளின் கேள்வுக் கட்டணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. வாடிக்கையாளர்கள்,ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருக்கு சுமார் 1565 எண்ணிக்கையிலான விவரத்திரட்டுகள் மாதாந்தம் விற்பனை செய்யப்பட்டன. ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கு சுட்டிகள் பயன்படுத்துகின்றன.

4. **CIDA வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல்**

நிர்மாணக் கைத்தொழிலுக்கான CIDA வெளியீடுகளை மீளாய்வதற்கும் புதிய வெளியீடுகளை வெளியிடுவதற்குமான பணியானது தொழில் நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்டுள்ள CIDAவெளியீடுகளை முன்னெடுக்கும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. CIDAவெளியீடுகளை மீளாய்தல், புதிய ஆவணங்களை வெளியிடுவதற்கான துறைகளை அடையாளம் காணல்,CIDA வெளியீடுகளை மீளாய்வதற்கு /புதுப்பிப்பதற்கு உப குழுக்களை நியமித்தல் மற்றும் அதனை CIDA பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுசெய்தல்,CIDA வெளியீடுகள் தொடர்பான இதழ்களை மீளாய்தல் /வரைதல், வளவாளர்களை அடையாளம் காணல், அவற்றை அங்கீகரித்தல் என்பவற்றுக்கான அறிவுறுத்தல்களை வழங்குதல், வெளியீடுகள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல் ஆகியன முன்னெடுத்தல் குழுவின் பணிகளாகும்.

நிர்மாணக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தரம், விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை நிர்னயிக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன: -

அ. தொழில்நுட்ப தரங்கள் மற்றும் விதிகளுக்கான குழு
ஆ. சுற்றாடல் மற்றும் பொது சுகாதார தரங்களுக்கான குழு
இ. ஒழுக்க மற்றும் சமூப் பொறுப்புனர்வுக்கான குழு

முன்மொழிவுகள் கோரப்பட்டு பொருத்தமான தொழில் வல்லுநர்கள் இக்குழுவுக்கு நியமிக்கப்படுவர்

புதிய ஆவணங்களை வரைதல் /நடைமுறையிலுள்ள ஆவணங்களை மீளாய்தல் போன்ற பணிகளுக்காக வேண்டி CIDA வினால் உப - குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட ஆவணங்கள்

- ICTAD/DEV/16 - கொண்கிரீட் தட்டுக்ககளை உறுதியாக வார்ப்பதற்கான விவர வரையறை
- ICTAD/DEV/17 - சிவில் பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பான தளப் பரிசோதனைக்கான விவர வரையறை
- சிவில் பொறியியல் அளவீட்டு முறைகளின் தரம் - CESMMSL
- SCA/3/1 – நீர்பாசன மற்றும் கழிவு நீர் வேலைகளுக்கான விவர வரையறை

**5. கருத்தரங்குகளை நடத்துதல்**

நிர்மாணச் சமூகங்களிடையே அரிவு விருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டி பின்வரும் கருப்பொருள்களில் 04 கருத்தரங்குகளை இப்பிரிவு நடாத்தியது.

i. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்
ii. ஒப்பந்த காப்புறுதி
iii. CIDA விலை தளம்பல் சூத்திரம் மற்றும் ஒப்பந்த அறவீடுகள்
iv. நிர்மாணக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட சம்பவ ஆய்வுகளினூடாக கேள்விமனு மதிப்பீட்டு விதிகள்

**6. தொழில்நுட்ப கணக்காய்வு**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தொழில்நுட்ப கணக்காய்வை மேற்கொள்ளும் நோக்கில் தர முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் பட்டியலொன்று அதிகார சபையினால் பேணப்படும். அதற்காக அமைக்கப்டும் குழுவின் அங்கத்தவர்களுக்கான முன்மொழிவுகள் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார தேசிய நிறுவனம், இலங்கை கணிய அளவீட்டாளர்கள் நிறுவனம்,(IQSSL), இலங்கை பொறியியலாளர்கள் நிறுவம் (IESL),இலங்கை கட்டடக் கலைஞர்கள் நிறுவனம் (SLIA),மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை பொறியியல் ஆலோசனைச் சங்கம், இலங்கை கட்டமைப்பு பொறியியலாளர்கள் சங்கம் (SSESL) மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவம் ஆகியவற்றிலிருந்து கோரப்பட்டுள்ளன.

**7. தகுதிவாய்ந்தவர்களை பதிவுசெய்தல்**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தகுதிவாய்ந்தவர்களின் பட்டியலொன்று அதிகார சபையினால் பேணப்படும். தகுதிவாய்ந்தவர்களை பதிவதற்கான அடிப்படைகள் ஏற்புடைய தொழில் வல்லுநர்களைக் கொண்டு நியமிக்கப்படும் நற்சான்றுக் குழுவினால் தயாரிக்கப்படும்.

- **பிணக்குத் தீர்ப்பாளர்களுக்கான டிப்ளோமா பயிற்சிநெறி**

2015 டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கவிருக்கும் பிணக்குத் தீர்ப்பாளர்களுக்கான டிப்ளோமா பாடநெறிக்கு இரண்டாவது குழுவினரை சேர்த்துக்கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

- **மையப் பூங்கா அமைத்தல்**

மையப் பூங்க அமைக்கும் திட்டம் CIDA நிறுவனத்தினதும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினதும்NERDC நிறுவனத்தினதும் ஒன்றிணைந்த திட்டமொன்றாகும். திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமிடத்துமையப் பூங்க கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 6.2 அபிவிருத்திப் பிரிவு

### 1.0 நிருமாண ஒப்பந்தக்காரர்களுக்கு தேசிய பதிவுமற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதாவது குறிப்பான ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான அவர்களது பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேசமான ஒப்பந்தக்காரர்களின் ஆற்றலளவுகளுக்கான ஒரு திரையிடும் நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில் நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் 482 எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டன, 254 ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டனர். 241 ஒப்பந்தக்காரர்களது பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் பிரதான (கட்டிட மற்றும் சிவில்), விசேட (மின் - பொறிமுறை), விசேட (முடிவுறுத்தல் மற்றும் வேறு விசேட வேலை) பதிவுக்கான வழிகாட்டல்கள் இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அது நிர்மாணக் கைத்தொழிலின் நலனுக்காக 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிடப்படவுள்ளது.

**ஒப்பந்தக்காரர்கள்(Online)தெடரறா முறையில் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலும் கண்காணிப்பு முறையும் மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை(NCIIS)**

இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டம் திறைசேரியின் நிதி வழங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிர்மாண துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இம்முறையை பின்பற்றுவதனூடாக பயணங்களுக்காக செலவிடுப்படுகின்ற காலத்தையும் அதற்காக செலவிடுகின்ற பணத்தையும் சேமிக்க முடியும்.

2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து C1 தரம் ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு C2 ,C3 தர ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை 2015 பெப்ருவரி மாதத்திலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

- **தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை(NCIIS)**

இலங்கை நிர்மணிப்புத் துறையின் செயற்பாடுகளின் வளர்ச்சியை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தேசிய நிர்மாண கைத்தொழில் தகவல் கட்டமைப்பு எனும் வெப் போர்டல் பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்ததாரர்கள் பதிவு, ஒப்பந்த கைத்தொழில் ஒழுங்கு விதிகள் போன்றனவும் மற்றும் எந்தவொரு நபரும் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்த கைத்தொழிலுடன் தொடர்புற்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி பற்றிய தகவல்கள் வெப் போர்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் சர்வதேச மட்டத்திலான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பகமான ஒரு மூலமாகவும் இது காணப்படுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலுக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகளின் தளம்பல்கள், அரச ஒழுங்கு விதிகள், நியமங்கள் மற்றும் சட்டவாக்கம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் செயலாற்றுகை போன்ற விடயங்களுக்கு ஏற்புடையவாறு இது அடிக்கடி விருத்தி செய்யப்படுகின்றது.

வெப் போர்டலின் அதிகமான அபிவிருத்திப் பணிகள் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலகலாவிய மட்டத்திலுள்ள நிர்மாணிப்பாளர்களுக்கு தேசிய சேவையாகவும் இலங்கையின் நிர்மாணிப்புத் துறையை மேலும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் முன்னெடுத்துச்செல்வதற்கு வசதியளிப்பதற்கும் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் தவணையிலிருந்து வெப் போர்டலை இணையத்தளத்தின் மூலம் நேரடியாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.0 நிருமாணத் திறமைக்கானICTAD விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த விருது வழங்கும் திட்டமொன்று 1990 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் தொடராக 2015 ஆம் ஆண்டு 26 ஆவது முறையாகவும் அது நடாத்தப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயற்றிறன், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரம், உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம், புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம், பயிற்சியில் கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2015 ஆம் ஆண்டின் போது 39 வேலைத்தள தரிசிப்புக்களும் / குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆண்டின் இறுதியில் மூன்று முன்வைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை CIDA உம் NCASL உம் கூட்டாக சேர்ந்து ஏற்பாடு செய்ததுடன் BMICH மாநாட்டு மண்டபத்தில் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிர்மாணிப்புக்களுக்கான தேசிய விருதுகள் நாடு முழுவதிலும் வியாபித்துள்ள கைவினையாளர்களின் மறைந்துள்ள திறன்களை வெளிக்கொண்டுவருவதை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைக்கேற்ற ஒரு எண்ணக்கருவாக உள்ளது. தொழிற்துறை தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழிற் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்குவபர்களுக்கு இது தொடராக அங்கீகரிக்கப்பட்ட பொதுவான ஒரு நிகழ்வாகும்.

**நிருமாணத்துறை சிறப்பு விருதுகள் - 2015**
**வெற்றியாளர்கள் - கட்டிடக் கருத்திட்டங்கள்**

| விருதின் வகை | கருத்திட்டம் | ஒப்பந்ததாரர் |
|---|---|---|
| சிறப்பு விருது | வீடமைப்பு இடமாற்ற குடியிருப்புத் திட்டம். – சிரில் சீ பெரேரா மாவத்தை, கொழும்பு 14, | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்நோடியம் (பிறைவட்) லிமிடட் |
| சிறப்பு விருது | சிடிசன் டிவலொப்மன்ட் பிஸ்னஸ் பினேன்ஸ் பீஎல்சி அலுவலக கட்டிடம் - கொழும்பு 10 | துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| சிறப்பு விருது | நெஸ்லே லங்கா பீஎல்சி இன் பண்டகசாரல கட்டிடம் - குருநாகல் தொழிற்சாலை – மாகந்துர, கோணவில. | ஆர் என் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட் |

**நிர்மாணத்துறை செயற்றிறன் விருது - 2015**
**சிவில் பொறியியல் கருத்திட்டங்களுக்கான விருதுகள்**
**செயற்றிறன் விருதுகள்**
**வகைI– பெறுமதி ரூபா 1000 மில்லியனுக்கு மேல்**

| தொ. இல | கருத்திட்டம் | ஒப்பந்தக்காரரின் பெயர் |
|---|---|---|
| 1 | வீதி புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் முனனுரிமைத் திட்டம் - 2 மஹியங்கனை – திம்புலாகல – தலுக்கனே வீதி (24.10 கி.மி – 72.807 கி.மி) மனம்பிட்டிய – அரகன்வில – மாதுறுஒய வீதி (0-3.0 கி.மி) ஒப்பந்த இலக்கம். RDA/RNIP/PRP2/PKGC/C15 | கேடீஏ வீரசிங்க என்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் |
| 2 | திஹகொட – கம்புறுபிட்டிய – மாவரல்ல – கொடபொல வீதி (TKMK) (24+000 கி.மி – 67+000 கி.மி) | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 3 | வீதி புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் - பொலநறுவை – தம்பல – சுங்காவில – சோமாவத்திய வீதி ( 00+000 முதல்3+760 கி.மி வரை) ஒப்பந்த இலக்கம். RDA/DW/NCP/GOSL/2011/289) | கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் என்ட் கன்ட்ரக்டர்ஸ் (பிறைவட்) லிமிடட் |

**வகைII– பெறுமதி ரூபா 500 - 1000 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| தொ .இல | கருத்திட்டம் | ஒப்பந்தக்காரரின் பெயர் |
|---|---|---|
| 1 | வேயன்கொட மேம்பால வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிர்மாண கருத்திட்டம். ஒப்பந்த இலக்கம். RDA/SB/F/10/G | அக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சி |
| 2 | அம்பாறை நீர் வழங்கல் கருத்திட்டம் (ஆயத்த திட்டம்) – நிர்மாண வடிவமைப்பு மற்றும் நிறைவு | சன்கேன் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவட்) லிமிடட் |

**வகைIII– பெறுமதி ரூபா 100 - 500 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| தொ .இல | கருத்திட்டம் | ஒப்பந்தக்காரரின் பெயர் |
|---|---|---|
| 1 | கருங்காரை பதித்தல் மற்றும் நடைபாதை மேம்பாடு – பெக்கேஜ் 3 – ஒப்பந்த இலக்கம் MCUDP/CMC/W/08 | எஸ்டேட் டிவலொப்மன்ட் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கோபரேஷன் |

**வகைIV - பெறுமதி ரூபா 100 மில்லியனுக்கு மேல்**

| தொ .இல | கருத்திட்டம் | ஒப்பந்தக்காரரின் பெயர் |
|---|---|---|
| 1 | மேல் கொக்கவிட்ட சிறு நீர் மின்வலு கருத்திடடம் - கொக்கவிட்ட, கலவான - ஒப்பந்த இலக்கம் - Terr/Kokaw/Upper/N/08/2009 | நிம்ன என்டர்பிரைசஸ் |

## 3.0 வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்தல்

இலங்கை கட்டிட திணைக்களம் NCASLமற்றும் CIDAஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட பூர்வாங்க விசாரணைக் குழாமொன்று ஒப்பந்தாரர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

**2015 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| **விளக்கம்** | **2015 பிணக்குகள்** |
|---|---|
| CIDA நிறுவனத்தின் தகவலுக்காக மாத்திரம் | 04 |
| ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விளக்கம் கோரலும் அவர்களினால் வழங்கப்பட்ட பதில்களும் | 11 |
| தீர்க்கப்பட்டவைகள் | 09 |
| CIDA நிறுவனத்துடன் தொடர்பற்றவை | 05 |
| **மொத்தம்** | **29** |

## 4.0 ICTAD சஞ்சிகை– 2015

2014 ஆம் ஆண்டுக்கான CIDA சஞ்சிகை நிர்மாணத்துறைக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தில் 2015 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. நிர்மாண கைத்தொழிலின் தர விடயங்கள் தொடர்பான தகவலை பரப்புவதே சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும். நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயனுள்ள கட்டுரைகளையும் தகவலையும் சஞ்சிகை வழங்குகின்றது.

இது சஞ்சிகையின் 13 வது பதிப்பாகும். இந்த வருடத்திலும் பங்காளர்களினாலும் புத்திஜீவிகளினாலும் வழங்கப்பட்ட மிக உயர்ந்த ஆதரவும் அர்ப்பணிப்பும் காரணமாக ICTAD / CIDA வரலாற்றின் 6 ஆவது தடவையாகவும் சர்வதேச மத்தியஸ்த சஞ்சிகையொன்றாக அது திகழ்ந்தது.

## 5.0 CIDAவின் கணனி முறைமை

பின்வரும் மிக முக்கிய பகுதிகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு கணனி முறைமையும் இணைய தளமும் திருப்திகரமாகப் பராமரிக்கப்பட்டன.

1. ஒப்பந்ததாரர்களின் தகவல் கட்டமைப்புக்கு (தனிநபர்) ‘Save’ மற்றும் ‘Print’ எனும் மாற்றீடுகளை அறிமுகம் செய்தல்.
2. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா பதிவு (On line) மற்றும் கொடுப்பனவு செலுத்தல் முறைக்கான திட்டத்தை நிறைவு செய்தல்.
3. ஆவணப் பாதுகாப்பு முறையை நிறைவு செய்தல் மற்றும் தொடர்ந்தும் ஆவணங்களைப் பாதுகாத்தல். புதிதாக கிடைக்கப்பெற்ற ஆவணங்களை ஆவண முறைக்குள் உட்படுத்துதல். (அபிவிருத்திப் பிரிவின் பதிவு கோவைகள்)
4. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா கண்கானிப்பு கட்டமைப்பு செயற்திட்டத்தை நிறைவு செய்தல். (C1,C2 மற்றும் C3) மற்றும் தற்போது C1 ஒப்பந்ததாரர்களில் 50% இணைப்பாக்கத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.
5. (தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் திரட்டு) NCIIS எனும் பெயரில் நிர்மாணக் கைத்தொழில் வங்கி திட்டத்தை ஆரம்பித்தல். டிசம்பர் மாத இறுதியில் கருத்திட்டத்தின் 85% நிறைவு செய்யப்பட்டுள்ளது.
6. CIDAநிறுவனத்தின் இன்டர்நெட் வசதியை கண்காணிப்பதற்கு/கட்டுப்படுத்துவதற்கு தரவு சர்வர் (Data Server) மற்றும் தரவு மையத்தை அபிவிருத்தி செய்தல்.

7. CIDAநிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவொன்றை ஆரம்பித்து அதற்கு தேவையான ஆளணி நியமிக்கப்பட்டுள்ளது.
8. CIDAநிறுவனத்தின் இணையத்தளத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மும் மொழிகளிலும் பிரசுரித்தல்.
9. அன்றாட செயற்பாடுகளை பராமரித்தல் மற்றும் CIDA இணையத்தளத்தை நாளதுவரைப்படுத்தல்.
10. CIDAநிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகளையும் சுமூகமாக கொண்டு செல்ல தேவையான கணினி வன்பொருட்களை கொள்வனவு செய்தல் (கணனிகள், பிரின்டர்கள், பெக்ஸ் இயந்திரம்)

### 6.0 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

இவ்வாண்டின் போது பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

- நீர் தரம் பிரிப்பு தொழில்நுட்பம் மற்றும் நீரை தக்கவைத்தல் கட்டமைப்பின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணப் பாங்குகள் தொடர்பான கருத்தரங்கு – 2015 பெப்ருவரி 13
- நிர்மாண வேலைத்தளங்களில் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு – 2015 மார்ச் 12
- நிர்மாணக் கைத்தொழிலில் சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான கருத்தரங்கு – 2015 ஏப்ரல் 02
- பாதை செப்பனிடல் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு – 2015 மே 21
- இணையத்தள முறையிலான “ நிர்மாண ஒப்பந்ததாரர் செயல்திறன் கண்காணிப்பு முறை” 2015 ஜுன் 10
- முதலீட்டாளர்களுக்கான தேசிய நிர்மாணக் கைத்தொழில் முறை பற்றிய பொது கலந்துரையாடல் - 2015 யூலை 23
- சரியான வேலைத்தள நடைமுறைகள் பற்றிய கருத்தரங்கு – 2015 ஆகஸ்ட் 06
- தொடர்ச்சியான தேர்ச்சி அபிவிருத்தி திட்டங்கள் (CCD) (03 கூட்டங்கள்) 2015 ஆகஸ்ட் 13, 2015 செப்டம்பர் 11 மற்றும் 2015 நவம்பர் 13
- ஆற்று மணல் மற்றும் அதன் மாற்றீடுகள் பற்றிய அறிமுக செயலமர்வு – 2015 செப்டம்பர் 01 மற்றும் 28
- வெளிநாட்டு ஒப்பததாரர்களுக்கான தற்காலிக பதிவு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் - 2015 ஒக்டோபர் 08
- வெளிநாடுகளில் திட்டங்களை முன்னெடுப்பதற்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015 நவம்பர் 12

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பை அதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை /செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளது


## 6.3 மின் எந்திரவியல் சேவைப் பிரிவு

நிர்மாண உற்பத்தித்திறனில் அளவிடக்கூடிய அதிகரிப்பொன்றைச் சாதிப்பதற்காக நிர்மாண கைத்தொழிலில் தகுதிவாய்ந்த நிருமாணச் செயற்பாடு ஒன்றை உருவாக்குவதற்காக நிருமாணச் சாதனங்களின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியன மீது தோச்சிகளையும் அறிவையும் பகிர்வதே மின் எந்திரவியல் சேவைப் பிரிவின் (EMS)நோக்காகும்.

மின் எந்திரவியல் சேவைப் (EMS)பிரிவின் நோக்கங்கள் வருமாறு:

1. நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் தமது தொழில்களை செயற்றிறனுடனும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை மேம்படுத்தல்.
2. நிர்மாண இயந்திர சாதன மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ ஆளணியினர் தமது தொழில்களைச் செயற்றிறமையாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை முன்னேற்றுதல்.
3. நிர்மாணத்துறையின் கிடைப்புத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் பழுதுபார்த்தல் ஆகுசெலவை குறைத்து நேரத்தைக் மீதப்படுத்தும் முகமாக நிர்மாண சாதனங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் பொருத்தமான தடுப்பு பராமரிப்பு செயல்முறைகளை விருத்திசெய்தலும் அமுல்படுத்தலும்.
4. நிர்மாணக் கைத்தொழிலினுள் பிரவேசிக்க உத்தேசிக்கும் நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் முறைமையான அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்.
5. நிர்மாணச் சாதன பயிற்சி நிலையத்தின் (CETRAC) மாதிரி வேலைத்தளத்தில் அவசியமான பயிற்சியை வழங்குவதன் மூலமும் நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும் கைத்தொழிலுக்கு உதவியளித்தல்.
6. இலங்கை நிர்மாணச் சாதன பொறிமுறையாளர்களினதும் இயக்குனர்களினதும் சீவியத் தொழிலின் சமூக அங்கீகரிப்பை மேம்படுத்தல்.

இயக்குனர் பயிற்சி நிலையம் (OTC) மற்றும் நிர்மாணச் சாதன பயிற்சி நிலையம் (CETRAC) ஆகிய இரு அலகுகளை CIDAஇன் EMS பிரிவுகொண்டுள்ளது.



### 6.3.1 இயக்குனர் பயிற்சிக் கல்லூரி

**நோக்கு**

“ நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்.”

**செயற்பணி:**

**“**நிர்மாணக் கைத்தொழிலின் திறமைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அறிவு, பராமரிப்பு மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவத்தினூடாக திறமையுள்ள தொழிற்படையொன்றை நிர்மாணத் துறையில் உருவாக்குதல் மற்றும் அதனூடாக நிர்மணத்துறையின் பயனுறுதியை அளவிட முடியுமான ஒன்றாக மாற்றுதல்”

**நோக்கங்கள்:**

- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய மட்ட திறமைகளுக்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்.
- இயந்திர உபகரணங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பான முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்.
- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் (NVQ) பரிசோதனைகளை நடாத்தல்.
- ஒப்பந்த இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்.
- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.
- அரசாங்க கருத்திட்டங்களில் ஒரு பகுதியைப் பெற்று புதிய இயக்குனர்களுக்கு அதிக அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.




**அறிமுகம்**

நகரி டிரக்டர்கள், சுமையேற்றிகள், தோண்டிகள், மோட்டார் தரப்படுத்திகள் போன்றவற்றின் பாதுகாப்பு, அடிப்படைப் பராமரிப்பு மற்றும் தொழிற்படுத்தல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடனான விசேட தொடர்புடன் நிர்மாண சாதனங்கள் மீதான பயிற்சியை இயந்திர சாதனப் பயிற்சி கல்லூரி வழங்குகின்றது. 56 தொகுதிகளைக் கொண்ட நிர்மாண இயந்திர சாதனங்களையும் போதிய எண்ணிக்கையிலான பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களையும் இயந்திர சாதனப் பயிற்சிக் கல்லூர கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான திறமைகளைப் பகிர்வதற்கான செயன்முறைப் பயிற்சிக்காக பயிற்சி நேரத்தின் சுமார் 70%ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீதி 30% பயிற்சி நேரம் பாடபோதனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான செயல்முறைப் பயிற்சி வழங்கப்படும் அதேவேளை வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்கத்திற்காக சில நிர்மாணச் சாதனங்கள் கேள்வுக்கு விடப்படுகின்றன.

இயக்குனர் பயிற்சி கல்லூரியினால் (OTC)நடாத்தப்படும் பயிற்சிகள் நிறுவன ரீதியான பயிற்சிகளையும் தொழில் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன. ஒரு பயிற்சியாளன் ஆகக் குறைந்தது மூன்று மாத தொழிற் பயிற்சியையும் நிறுவன ரீதியான பயிற்சியையும் பூர்த்தி செய்த பின்னர் அவர் NVQ தகைமையைப் பெறுகின்றார். இயக்குனர் பயிற்சி கல்லூரி (OTC) நிர்மாண இயந்திர சாதன

இயக்குனர்களுக்கான தேசிய வர்த்தக பரிசோதனைகள் மற்றும் NVQ பரீட்சைகளையும் நடாத்துவதற்கு NAITA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி.(OTC)இல் நடத்தப்படுகின்றன:**

1. பூர்வாங்கப் பயிற்சி
   - 1.1 அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு
2. பயில்திறன் அபிவிருத்தி
   - 2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
   - 2.2 தொட்டி பாரவண்டி
   - 2.3 பண்ணை டிரக்டர்
   - 2.4 பாதை ரோலர்
3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்
   - 3.1 நகரி டிரக்டர்
   - 3.2 சக்கரத்திலான சுமையேற்றி
   - 3.3 மோட்டார் தரப்படுத்தி
   - 3.4 நீரியல் தோண்டி
   - 3.5 பின்வாரி ஏற்றி
   - 3.6 சக்கரத் தடை பளுவேற்றி
4. சிறப்பு சாதனங்கள்
   - 4.1 நடமாடும் கிரேன்
   - 4.2 பொறி ஏற்றி இறக்கி
   - 4.3 முள் வாரி ஏற்றி
   - 4.4 கிரேன் பாரவண்டி
5. தொழில் தேர்வுகள்
   - 5.1 தேசிய தொழில் தேர்வுகள்
   - 5.2 NVQ தேர்வுகள்
6. விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் 2014 / 2015 ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது. இ.ப.க. இல் நடத்தப்படும் சகல பயிற்சி நெறிகளும் கட்டணம் அறவிடப்படும் பயிற்சி நெறிகள் என்பதுடன் இவற்றில் சில பாடசாலையை விட்டு விலகியோரினதும் தொழிலற்ற இளைஞர்களினதும் மத்தியில் உயர்வான கிராக்கியைக் ஏற்படுத்தியுள்ளன.

7. **கருத்தரங்குகள் /செயலமர்வுகள்**

நிர்மாணக் கைத்தொழில் துறையின் கேள்விக்கு ஏற்ப OTC கல்லூரியினால் நிர்மாண சாதனங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திறன் தேர்வுகள் என்பன நடாத்தப்படுகின்றன. OTC யின் பணிகளை விரிவாக்கும் நோக்கிலும் சகலருக்கும் நன்மை பயக்கும் விதத்திலும் 2014 ஆம் ஆண்டு சாரதிகளுக்கென விசேட செயலமர்வு நடாத்தப்பட்டது.

2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட JBICதிட்டத்தை தவிர 2015 ஆம் ஆண்டில் அதி கூடிய அளவிலான பயிற்சியாளர்கள் பங்குகொண்டனர். பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பயிற்சித் திட்டம் தொடர்பிலான சாதனைகளும் அட்டவணை5.3.3 வழங்கப்பட்டுள்ளன.

| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | திட்டமிடப்பட்டவை | | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| **1.0** | பூர்வாங்கப் பயிற்சி | | | | |
| | 1.1 நிருமாணச் சாதனங்களின் அடிப்படை பராமரிப்பு | 26 | 710 | 23 | 543 |
| **2.0** | பயில்திறன் அபிவிருத்தி | | | | |
| | 2.1 பாரமற்ற சாதனம் | 04 | 13 | -- | -- |
| | 2.2 டிரக்டர் | கேள்விக்கு அமைய | கேள்விக்கு அமைய | 02 | 03 |
| | 2.3 தன்னியக்க ரோலர் | 06 | 18 | 06 | 20 |
| | 2.4 தொட்டி பாரவண்டி | 04 | 08 | 01 | 01 |
| **3.0** | மண் அகற்றும் சாதனங்கள் அடிப்படை மட்டிசைப்புகள் | | | | |
| | 3.1 நகரி ட்ரக்டர் | 04 | 10 | 04 | 13 |
| | 3.2 சக்கரத்திலான சுமையேற்றி | 06 | 30 | 03 | 18 |
| | 3.3 மோட்டார் தரப்படுத்தி | 09 | 60 | 10 | 65 |
| | 3.4 நீரியல் தோண்டி | 09 | 90 | 12 | 108 |
| | 3.5 பின்வாரி ஏற்றி | 13 | 200 | 12 | 139 |
| | 3.6 சக்கரத் தடை பளுவேற்றி | 09 | 27 | 03 | 05 |
| **4.0** | நிபுணத்துவச் சாதனங்கள் | | | | |
| | 4.1 நடமாடும் கிரேன் | 07 | 20 | 05 | 18 |
| | 4.2 பொறி கொண்டுசெல்லி | 10 | 31 | 08 | 22 |
| | 4.3 முள்கரண்டி ஏற்றி இயக்கி | 10 | 30 | 07 | 22 |
| | 4.4 கிரேன் பாரவண்டி | 09 | 45 | -- | -- |
| | மொத்தம் | **126** | **1292** | **96** | **977** |

**<u>இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுதல்</u>**

இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் மேலதிக சேவையொன்று இயக்குனர் பயிற்சிக் கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பயிற்சி நிலையத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுகின்றது. பயிற்சியை முன்னிலைப்படுத்தி கையிருப்பிலுள்ள இயந்திர சாதனங்களை கட்டுமானக் கைத்தொழிலுக்கான சேவை நோக்கத்தில் வாடகைக்கு விடப்படுகின்றன.

**<u>இயந்திர சாதனங்கள் இயக்கும் பயிற்சி – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு</u>**

வேலையற்ற இளைஞர்களை தெரிவு செய்து வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தென் மாகாணத்தின் திறன் விருத்திக்காக நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தங்குமிட வசதி உணவு போக்குவரத்து என முற்றிலும் இலவசமாக நடாத்தப்பட்டன. அவர்களது தெரிவுக்கு அமைய 40 பயிற்சியாளர்களுக்கு நிர்மாண சாதங்கள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.

**2015 ஆம் ஆண்டின் இயக்குநர் பயிற்சிக் கல்லூரியினால் ஈட்டப்பட்ட வருமானம்**

| தொழில் வகுதி | வருமானம் (ரூபா.மி) |
|---|---|
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14,917,210.95 |
| இயந்திரங்கள் வாடகை | 1,294,366.85 |
| தொழில் தேர்வுகள் | 16,000.00 |
| இயக்குநர் அடையாள அட்டைகள் | 290,750.00 |
| விடுதி வாடகை | 6,833.33 |
| நானாவிதமானவை | 366,989.54 |
| **மொத்தம்** | **16,892,150.67** |

### 6.3.2 நிருமாண இயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி அலகு

CIDA வின் நிர்மாண இயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது. கருத்திட்ட மற்றும் பராமரிப்பு முகாமையாளர்கள், இயந்திய பொறியியலாளர்கள், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட இயந்திரவியலாளர்கள், இயந்திர உதவியாளர்கள் மற்றும் பாடசாலை விலகியோர் ஆகியோருக்கான பயிற்சி நெறிகளும் CETRAC நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.





**CETRAC இன் பயிற்சித் திட்டங்கள்**

1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRACஇன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. CIDA வினால் கட்டிட சேவை பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் CETRAC ஆரம்பித்துள்ளது.

**நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்**

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில்முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

**நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி**

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி நடத்தப்படுகிறது. இது மூன்று வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRACஇல் 09 மாதங்களைக் கொண்ட நிறுவனரீதியான பயிற்சியையும் தொழில் நிலையங்களில் 27 மாதங்களைக் கொண்ட செயல்முறைப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று 60 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

இப்பயிற்சியாளர்களுக்கு NAITAஇனால் மாதாந்தம் ரூபா 1,000/- கொடுப்பனவு செய்யப்படுவதுடன், அவர்களுக்கான இலவச தங்குமிடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் வேறுபட்ட தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 பயிற்சியாளர்கள் CETRACஇல் நிறுவன ரீதியிலான பயிற்சியை மேற்கொள்வதுடன், அதன் மொத்தச் செலவினத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஆண்டு ஒன்றுக்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

**ஊழியர்களின் பயில்திறனைத் தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்**

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்புமற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் முகாமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

**கனிஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 2)**

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில்வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி பல பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன் இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

**சிரேஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 3)**

சிரேஷ்ட பொறிமுறையாளர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.




**மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்**


நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

**பொறியியலாளர்கள் /முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்**

நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியன மீது சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

பொறியியலாளர்களுக்கும்,முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

**களஞ்சிய /விநியோக /கருத்திட்ட பணியணியினருக்குமான பயிற்சித் திட்டங்கள்**

வழமையாக நிர்மாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய/விநியோககருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்படுத்தல் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இவ்விரு பயிற்சித் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டன.

**கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்**

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள பொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச்சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

**வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்**

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈட்டப்பட்ட அனுபவத்துடன் நாட்டில் மாற்றமடைந்து வரும் கிராக்கியைப் பூர்த்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை இனம் கண்டு விருத்தி செய்ததினூடாக பயிற்சியில் பலதரப்பட்டதும், குறிப்பானதுமான கிராக்கிகளை CETRACஇனால் வெற்றிகரமாக ஈடுசெய்வதற்கு இயலுமாகியது.

2015 ஆம் ஆண்டுCETRAC இன் செயற்றிறன் பின்வருமாறு

**அட்டவணை 1 :** 2015 ஆம் ஆண்டு CETRAC இன் செயற்றிறன்

| | பயிற்சி நெறிகள் | பதிவு செய்யப்பட்ட | | வெளியேறிய | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| | **பாடசாலையை விட்டு விலகியோர் (மட்டம் I)**<br>**நிர்மாண கருவிகள் இயந்திரவியல் பயிற்சித் திட்டம்(BM)** | 2 | 60 | 2 | 52 |
| | **பயிற்சி நெறிகள்** | இலக்கிடப்பட்டவிளைவு | | உண்மையான விளைவு | |
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| | **கனிஷ்ட பொறிமுறையாளர்கள் (மட்டம்II)** | | | | |
| | டீசல் என்ஜின்களின் பராமரிப்பு | 1 | 15 | 1 | 37 |
| | நீரியல் முறைமைகளின் பராமரிப்பு - 15M22 | 2 | 30 | 2 | 33 |
| | டீசல் மின்பிறப்பாக்கிகளின் பராமரிப்பு- 15M25 | 2 | 30 | 2 | 58 |
| | கடவுதல்கள், தடைகள், பிடி முறைமைகளின் பராமரிப்பு - 15M26 | 2 | 30 | 1 | 09 |
| | முறுக்கு மாற்றிகள் மற்றும் செலுத்தல் முறைமைகளினதும் பராமரிப்பு–15M27 | 2 | 30 | 1 | 11 |
| | நிர்மாண இயந்திர சாதனத்தின் இயந்திர மற்றும் இலத்திரனியல் பராமரிப்பு–15MT | 2 | 30 | 1 | 18 |
| | நீர் பம்பிகளினதும், அழுத்திகளினதும் பராமரிப்பு- 15WPC | 1 | 15 | 2 | 35 |
| | தன்னியக்க இலத்திரனியல் முறைமையின் பராமரிப்பு -15M24 | 2 | 30 | 1 | 10 |
| | நிர்மாண இயந்திர சாதனங்களை சேர்விஸ் செய்தல-15SCE | 2 | 30 | -- | -- |
| 03 | **சிரேஷ்ட பொறிமுறையாளர்கள் (மட்டம்III)** | | | | |
| | நீரியல், இயக்கத்திரனியல் முறைகளின் பராமரிப்பு - 15M32 | 1 | 15 | -- | -- |
| | தன்னியக்க மின்னியல் முறைகளின் பராமரிப்பு-15M34 | 1 | 15 | -- | -- |
| 04 | **பொறியியலாளர்கள்** | | | | |
| | நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்பாடு – 15CPM | 1 | 15 | -- | -- |
| | நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு- 15CEM | 1 | 15 | -- | -- |
| 05 | **மேற்பார்வை** | | | | |
| | நிரமாண இயந்திர சாதனத்தின் பராமரிப்பு நீரியலிலும், செலுத்துகையும் - 14SUP 1 | 1 | 15 | -- | -- |
| | நிர்மாண இயந்திர சாதனத்தின் பராமரிப்பு இயந்திரமும், இயக்கத்த்திரனியலும்- 14SUP 2 | 1 | 15 | -- | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | **துணைப் பணியணியினர்** | | | | |
| | மனித வள அபிவிருத்தி அடிப்படை பாடநெறி | 1 | 20 | 1 | 10 |
| | களஞ்சியப்படுத்தல் அடிப்படைப் பாடநெறி | 2 | 30 | 1 | 14 |
| | கழிவு நீர் பராமரிப்பு, ஆலை தொழிற்பாடு மற்றும் கண்காணிப்பு | 1 | 40 | 1 | 26 |
| | களஞ்சியப்படுத்தல் சான்றிதழ் பாடநெறி | 2 | 60 | 2 | 51 |
| | களஞ்சியப்படுத்தல் உயர் சான்றிதழ் பாடநெறி | 1 | 10 | 1 | 24 |
| | களஞ்சியசாலை சரிபாரப்பு ஒரு நாள் செயலமர்வு | 2 | 84 | 2 | 79 |
| | | | | | |

| | **பயிற்சி நெறிகள்** | இலக்கிடப்பட்டவிளைவு | | உண்மையான விளைவு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப் பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப் பாளர்களின் எண் |
| 07 | **வழக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகள்(CET)** | | | | |
| | நடமாடும் கிரேன் இயக்குதல | 1 | 10 | 1 | 3 |
| | கவருயர்த்தி இயக்குதல் | 1 | 25 | 4 | 15 |
| | கவருயர்த்தி இயக்குதல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 1 | 30 | -- | -- |
| | வாகனப் பராமரிப்பு தொடர்பான விஞ்ஞான அனுகுமுறை | 1 | 25 | -- | -- |
| | நீரியல் முறைமைகள் பராமரிப்பு | 1 | 30 | -- | -- |
| | நிர்மாணக் கருவிகள் பராமரிப்பு | 1 | 30 | -- | -- |
| | நீர் பம்பிகள் மற்றும் காற்று கொம்பெசர்கள் | 1 | 35 | -- | -- |
| | டீசல் மின் பிறப்பபாக்கிகள் | 1 | 30 | -- | -- |
| | கைத்தொழில் பாதுகாப்பு | 1 | 30 | -- | -- |
| | கைத்தொழில் நீரியக்கம் | 1 | 30 | -- | -- |
| 08 | **வழக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகள் (BSE)** | | | | |
| | கட்டிடங்களில் தீப் பாதுகாப்பு முறைகள் பற்றிய செயலமர்வு | 1 | 40 | 1 | 36 |
| | வர்த்தக கட்டிடங்களுக்கான சிறந்த பராமரிப்பு திட்டங்கள் பற்றிய கருத்தரங்கு | 1 | 40 | 1 | 33 |
| | குளிரூட்டிகளுக்கு பசுமை முறையிலான தீர்வுகள் | 1 | 40 | 1 | 27 |
| | கட்டிடத்தின் சக்தி செயற்திறனை அதிகரித்தல் மற்றும் சேமித்தல் | 1 | 40 | 1 | 36 |
| | | 1 | 30 | 1 | 22 |
| | நீச்சல் தடாகங்கள் பராமரிப்பு | 1 | 30 | -- | -- |
| | மின்சார முறைகளை பொருத்தல் | 1 | 40 | -- | -- |
| | குழாய் பொருத்தல் மற்றும் வடிகாலமைப்பு முறைகள் | 1 | 40 | -- | -- |
| | தீப் பாதுகாப்பு முறைகள் | 1 | 40 | -- | -- |
| 09 | **கருத்தரங்குகள** | | | | |
| | சாரதிகள் பயிற்ச | 1 | 100 | 7 | 363 |
| | ஊழியர்களை உற்பத்தித்திறனை நோக்கி வழிநடாத்துவது எவ்வாறு? | 1 | 100 | 1 | 67 |
| | நீரியக்க முறைகளின் குறை நிறைவு செய்தலும் பராமரிப்பும் | 1 | 100 | 1 | 49 |
| | போக்குவரத்து முகாமைத்துவம் | 1 | 100 | 2 | 112 |
| | | | | | |
| | விஞ்ஞான ரீதியான பாதுகாப்பான வாகன ஓட்டல் தொழில்நுட்பம் | 1 | 100 | 1 | 82 |
| | விஞ்ஞான ரீதியானதும் பாதுகாப்பானதுமான வாகன ஓட்டல் தொழில்நுட்பம் | 1 | 100 | -- | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நீரியக்க அடையாளங்களும் சர்கிட்டுகளும் | 1 | 100 | -- | -- |
| | நிர்வாக ஒழுங்குவிதிகள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் | 1 | 100 | -- | -- |
| | விஞ்ஞான ரீதியானதும் பாதுகாப்பானதுமான வாகன ஓட்டல் மற்றும் சாரதியின் நடத்தைப் பற்றிய கருத்து | 1 | 100 | -- | -- |
| | பொதுவான புகைவண்டி டீசல் எரிபொருள் முறை | 1 | 100 | -- | -- |
| | **மொத்தம்** | 62 | 2089 | 43 | 1312 |

**2015 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம்**

| **தொழில் வகுதி** | **வருமானம் (ரூ.மி)** |
|---|---|
| பயிற்சி நெறிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள | 8.42 |
| வேலைத்தள பழுதுபார்ப்புகள் மற்றும் ஏனைய வேலைத்தள பணிகளும் | 1.84 |
| வாடகைக்கு வழங்குதல் | 9.58 |
| **மொத்தம்** | 19.84 |

## 6.4 பயிற்சிப் பிரிவு

இப்பிரிவுக்கு தொழிற்துறையின் தற்போதைய மற்றும் எதிர்கால மனித மூலதன தேவைகளை மதிப்பிடும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது அத்தோடு மனித மூலதனத்தின் தற்போதைய திறன் அளவுளை அதிகரிக்க தேவையான பயிற்சி திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், தொழில்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அன்மைய தொழில்நுட்ப வளர்ச்சியை இணைத்து தொழிற் துறையில் கவர்ச்சியை ஏற்படுத்தி மனித மூலதனத்தை தக்கவைத்துக்கொள்ளும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திறன்கள் மற்றும் தொழில் அறிவை தொடர்ந்தும் விருத்தி செய்வதற்கு தேவையான தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான அபிவிருத்தி திட்டங்கள் மூலம் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். ஊஐனுயு நிறுவனம் தேசிய அளவிலான நிர்மாண சங்கங்கள், அரசாங்க மற்றும் பிற தனியார் நிறுவனங்ளோடு மிகவும் நெருக்கமாக பணியாற்றி வருகிறது.

இப்பிரிவு பிரதான இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ. தேசிய மட்டத்திலான திறன் விருத்தி பயிற்சிகள் (பிரதான அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது)
ஆ. கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிட மையம் **(CHPB)**

**அனுகுமுறை,**

நிர்மாணத்துறையில் திறனுள்ள தொழிலாளர்களின் பற்றாக்குறையானது பாரியளவில் வளர்ந்துவரும் இத்துறையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

நிர்மாணத்துறையில் இளைஞர்கள் இணைந்துகொள்வதில் பாரிய சரிவு நிலை கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டு வருகின்றது. இந்த இளைஞர் தலைமுறையினர் சிறப்புத் திறன்கள் மற்றும் பயிற்சிகள் தேவைப்படாத முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாகவும் பாதுகாப்பு ஊழியர்களாகவும் தொழில் புரிவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்ற உண்மையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எனவே,பயிற்சிப் பிரிவு இதனைக் கருத்திற்கொண்டு இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் மற்றும் தனி நபர்களின் பயிற்சித் தேவையயை நிறைவேற்றும் பொருட்டு மூன்று மனித வள மட்டங்களில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதாவது,

- முகாமைத்துவ மட்டம்
- மேற்பார்வை மட்டம்
- கைவினைஞர் மட்டம்

அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

அ. தேசிய மட்டத்தில் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சி அலகு (தலைமையகத்தில்)ஷ

❖ **ஒப்பந்தம் மற்றும் பெறுகை முகாமைத்துவம் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி**



அரசாங்க மற்றும் தனியார் துறையில் பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்களது முகாமைத்துவ அறிவையும் திறன்களையும்

நாளதுவரைப்படுத்திக்கொள்ள 09 மாதங்களைக் கொண்ட “பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி” ஒவ்வொரு வருடமும் CIDA நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பெறுகை மற்றும் ஒப்பந்த விடயங்களுக்கு பொறுப்பான 55 பேர் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டனர்.

❖ **விலை மனு கோரல் மற்றும்தள அளவீடும் மாதாந்த பற்றுச்சீட்டு தயாரித்தலும்”**

சிறிய மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களின் முகாமைத்துவ அறிவை மேம்படுத்தும் நோக்கில் “விலை மனு கோரல்” மற்றும் “தள அளவீடும் மாதாந்த பற்றுச்சீட்டு தயாரித்தலும்” எனும் பயிற்சி நெறி பயிற்சிப் பிரிவினால் வருடம் தோறும் நடாத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டு இந்தப் பாட நெறிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்பட்டது. இரு மொழிகளிலும் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 458 ஒப்பந்ததாரர்கள் இப்பயிற்சி பாடநெறியில் கலந்து கொண்டனர்.



❖ **மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் பணியாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தேசிய மட்டத்தில் தொழில்நுட்ப திறன்களை தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளின் பேரில் நாடு பூராகவமுள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றும் தொழில்நுட்ப ஆளணியினருக்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கபட்டு நடாத்தப்பட்டது. சகல மாகாணங்களையும் உள்ளடக்கி 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.676 உத்தியோகத்தர்கள் இதில் பங்குபற்றினர்.



| மாகாணம் | மாவட்டம் | பங்குபற்ற ியோர் | நிலையம் | பாடப் பரப்பு |
|---|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | கொழும்/ கம்பஹா | 92 | சவ்சிறிபாய கேட்போர்கூடம் | 1. திட்ட வரைவும் நடைமுறைப்படுத்தலும்<br>2. வேலைத்தளங்களை ஒழுங்குசெய்தல்<br>3. முன்னேற்ற கட்டுப்பாடு<br>4. வேலைத்தளங்களின் பாதுகாப்பு<br>5. வீட்டு வைரிங்<br>6. பாதை கொன்கிரீட் |
| **மத்திய மாகாணம்** | கண்டி.். நுவரெலியா .்.மாத்தளை | 82 | கண்டி பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **தென் மாகாணம்** | மாத்தறை/ காலி/ ஹம்பாந்தோட்டை | 99 | மாத்தறை பிரதேச செயலக கேட்போர்கூடம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| **வடமேல் மாகாணம்** | குருநாகல் / புத்தளம் | 81 | குருநாகல் பிரதேச செயலக கேட்போர்கூடம் | பன்னுதல்<br>7. நிர்மாணப் பொருட்கள் அறிமுகம்<br>8. பெறுகை முறைகள்<br>9. நில அளவையும் மட்டமும்<br>10. ஓட்டோ CAD<br>11. அலுமினிய கட்டுருவாக்கம் |
| **சப்பிரகமுவ மாகாணம்** | இரத்தினபுரி / கேகாலை | 60 | இரத்தினபுரி பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **ஊவா மாகாணம்** | பதுளை / மொணராகலை | 60 | பதுளை பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **வட மத்திய மாகாணம்** | அநுராதபுரம் / பொலநறுவை | 59 | அநுராதபுர பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **வடக்கு மாகாணம்** | கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ வவுனியா/ யாழ்ப்பாணம் /மன்னார் | 59 | கிளிநொச்சி பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **கிழக்கு மாகாணம்** | மட்டக்களப்பு / அம்பாறை /திருகோணமலை | 84 | மட்டக்களப்பு பிரதேச செயலக கேட்போர்கூடம் | |
| **மொத்தம்** | | **676** | | |

**நிர்மாண பாதுகாப்பும் தொழில்சார் சுகாதாரமும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**



நிர்மாண தொழில் இறுதி பெறுபேறு தரம் மற்றும் உற்பத்தித் திறன் அடிப்படையில் இலங்கையில் படிப்படியாக நவீன மற்றும் சிக்கலான நிர்மாண தொழில் நுட்பங்கள் மற்றும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

CIDA தொழில் திணைக்களத்தின் தொழில்சார் சுகாதார பிரிவுடன் இணைந்து கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிலைகளில் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம்.

- **நிர்மாண தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார டிப்ளமோ பாடநெறி (DCOSH):**

  முகாமைத்துவ மற்றும் அதற்கு கீழ் மட்டத்தில் உள்ளவர்களை இலக்காகக் கொண்ட ஒவ்வொரு வாரமும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் ஆறு மாத பயிற்சி பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.



- **நிர்மாண தொழில் பாதுகாப்பு மற்றும்சுகாதார சான்றிதழ் பாடநெறி (CCOSH):**

ஒரு வேலை தளத்தில் தொழிலாளர்களுக்கு கணிசமான குறைந்த ஆபத்து ஏற்படுவதற்கு தேவையான அறிவை வழங்கும் பொருட்டு மேற்பார்வை நிலை மற்றும் அதற்கு கீழே உள்ளவர்ளை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமையன்று நடத்தப்படும் நான்கு மாத பயிற்சி பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ் பாடநெறி 2015 நவம்பர் முதல் 2016 ஏப்ரல் வரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அரசாங்க மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 45 பேர் இப்பாடநெறியில் பங்குபற்றுகின்றனர்.

❖ 2015 ஆம் ஆண்டு பின்வருமாறு கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடாத்தப்படடன.

| மாதம் | நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியோர் |
|---|---|---|
| பெப்ருவரி | தொழில்நுட்ப ஆளணியினருக்கான கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் பற்றிய செயலமர்வு | 62 |
| பெப்ருவரி | பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பாக நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கான கருத்தரங்கு | 185 |
| மார்ச் | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் பற்றிய செயலமர்வு | 84 |
| ஜுன் | கழிவு நீர் சேகரிப்பு மற்றும் வடிகாலமைப்பு முறைகளின் அடிப்படை தத்துவங்கள் பற்றிய பயிற்சிநெறி | 79 |
| ஆகஸ்ட் | நிர்மாண பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதார பயிற்சிநெறி | 45 |

## ❖ RPL/NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

NVQ தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழைப் பெற்று தகுதிவாய்ந்த கைவினைஞராக மாறுவதற்வாக 27 RPL/NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உக்குவெல, கொழும்பு, அநுராதபுரம், இரத்தினபுரி, மாத்தறை, கல்முனை, வலஸ்முல்ல, திஸ்ஸமகாராம, ஹம்பாந்தோட்டை, பெலியத்த, யாழ்ப்பாணம், கேகாலை, மன்னார், குருநாகல், கட்டுவன, கண்டி, அம்பாறை, பொலனறுவை, நிந்தவூர், மட்டக்களப்பு, பத்தரமுல்ல, மிரிஜ்ஜவில ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்தப்பட்டன. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் மேசன்கள், தச்சர்கள் மற்றும் குழாய் பொருத்துனர்கள் என 3201 கைவினைஞர்கள் கலந்து கொண்டனர்.



**அ. வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிட மையம் [CHPB] வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிட மையம் (CHPB)நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை CIDA முகாமைத்துவ நியாயாதிக்கத்தின் கீழ் இயங்கும் பலநோக்கு ஒழுக்கவியல் நிறுவனமாகும்.தொழில்நுட்பவியராளர்களினதும் தொழில் வல்லுனர்களினதும் தொழில் வளர்ச்சியை இலக்காகக் கொண்ட பாடநெறிகளை (CHPB) நிறுவனம் நடாத்துகின்றது. (CHPB) நிறுவனத்தினால் நடாத்தப்படும் பெறுமதிமிக்க இத் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு கிடைத்துள்ள உயர் நன்மதிப்பு அதன் நிபுணத்துவ ஆற்றலுக்கு சான்று பகர்கின்றது.





- **CHPB பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

விசேடமாக நிர்மாணத்துறை முகாமைத்துவம் மற்றும் கணிய அளவீடு எனும் நிர்மாணத்துறையின் இரண்டு பகுதிகளில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு கவனம் செலுத்தி வருகின்றது.
நிர்மாணத்துறை முகாமைத்துவம் சார்ந்த பயிற்சி நெறிகள் உயர் நிர்மாண முகாமைத்துவ டிப்ளோமா (DACM) மற்றும் நிர்மாணப் பணிகள் முகாமைத்துவம் (CWM) எனும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**ஆ. 1 DACM நிகழ்ச்சித்திட்டம்**

(DACM)பயிற்சி நெறியின் இலக்கு குழுவாக நிறைவேற்று தரத்திலுள்ளவர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், கணிய அளவீட்டாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் நிர்மாணத்துறை முகாமையாளர்கள் ஆகியோர் இனம் காணப்பட்டுள்ளனர்.










**ஆ. 2 CWM நிகழ்ச்சித்திட்டம்**:

இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முழு நேரம் மற்றும் பகுதி நேரம் என மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைய வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- (CWM)முழு நேர பயிற்சி நெறியின் இலக்கு குழுவாக இருப்பவர்கள் பாடசாலை விலகியோரும் நிர்மாணத்துறையில் மேற்பார்வையாளர்களாக இணைவதற்கு விரும்பும் இளம் ஆர்வலர்களும் ஆவர்.

- பகுதி நேர பயிற்சி நெறிகள் நிர்மாண கைத்தொழில் துறைப் பற்றிய கல்வி அறிவோ அல்லது தகைமைகளோ அற்ற நிமாணத் துறையில் மேற்பார்வையாளராக வருவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆ.2.1 CWM முழு நேர பாடநெறி :**

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் மேற்பார்வையாளர்களுக்கான பாரிய கிராக்கி காணப்படுகின்றது. தகுதிவாய்ந்த மேற்பார்வையாளர்கள் வெளிநாட்டு தொழில் சந்தையில் காணப்படும் அதிக கிராக்கி காரணமாக உள்நாட்டு கைத்தொழில் துறையில் அவர்களை தக்கவைத்துக்கொள்ள முடிவதில்லை. அத்தோடு நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு உள்வாங்கப்படும் புதியவர்களின் போக்கும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே நாட்டில் நிலவுகின்ற வேலையின்மைப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் வளர்ந்து வரும் இக்கைத்தொழில் துறையில் இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும் ஆரம்ப கட்டத்தில் பாடசாலை விலகியோரை மையமாகக் கொண்டு பெறுமதிமிக்க பாடநெறிகளை நடாத்த முடிசெய்யப்பட்டது. நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ (CWM) முழு நேரப் பாடநெறி இந்த பாரிய இடைவெளியை நிரப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது ஒரு வருட கால பாடநெறியாகும். CHPB நிறுவனத்தில் 05 மாத நிறுவன ரீதியான பயிற்சியையும் 07 மாத கால சேவை முன்னோடிப் பயிற்சியாகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆ.2.2 நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- பகுதி நேரம்**

இந்த பாடநெறி ஏற்கனவே நிர்மாணப் பணிகளில் மேற்பார்வையாளர்களாக கடமையாற்றுகின்றவர்களுக்கு பயனுள்ள விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.






### ஆ.3 கணிய அளவீட்டு பாடநெறிகள்





**கணிய அளவீட்டு பாடநெறிகள் :**

கணிய அளவீட்டு பாடநெறிகள் மூன்று மட்டங்களைக் கொண்டுள்ளது. சான்றிதழ், டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் இலக்குக் குழுவாக அனுபவமுள்ள நிர்மாண வேலைகள் மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உதவி கணிய அளவீட்டாளர்கள் மற்றும் ஆர்வலர்கள். மேலுள்ள இரு துறைகளும் தேசிய தொழிற் தகைமை (NVQ) பாடத்திற்கு அமைய வழிநடாத்தப்படும்.

### ஆ.3.1 கணிய அளவீட்டு உயர் டிப்ளோமா பாநெறி

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உதவி கணிய அளவீட்டாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. CHPD நிறுனத்தின் டிப்ளோமா பாடநெறியை பூரணப்படுத்தல்,CHPB ஆரம்ப மற்றும் பிந்திய ஒப்பந்தம், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொண்ட கணிய அளவீட்டு QSடிப்ளோமா ஆகிய தகைமைகள் இப்பாட நெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பாடநெறி ஒரு வருட காலத்தைக் கொண்டதாகும். (வாரத்திற்கு ஒரு நாள், மொத்த நாட்கள் 60).





### ஆ.3.2 கணிய அளவீட்டு டிப்ளோமா பாநெறி

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வடிவமைப்பு திட்ட வரைவாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. CHPD நிறுனத்தின் சான்றிதழ் பாடநெறியை பூரணப்படுத்தல்,CHPB BOQ மற்றும் மதிப்பீடு செய்தல்,NCT QS, NT QS, NVQ மட்டம் 4

மற்றும் அதற்கு சமமான தகைமைகள் இப்பாட நெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பாடநெறி 10 மாதங்களைக் கொண்டதாகும். (வாரத்திற்கு ஒரு நாள், மொத்த நாட்கள் 40). CHPD Q.S. சான்றிதழ் பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் பாடநெறி தகமையைப் பரிசோதிப்பதற்கான நுழைவுப் பரீட்சையொன்று நடைபெறும்.

*CHPD Q.S.* சான்றிதழ் பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் பாடநெறி தகமையைப் பரிசோதிப்பதற்கான நுழைவுப் பரீட்சையொன்று நடைபெறும்.







- **ஆ.3.3 கணிய அளவீட்டு சான்றிதழ் பாடநெறி**

இப்பாட நெறி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வடிவமைப்பு திட்ட வரைவாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர மற்றும் கீழ் நிலை அலுவலர்கள் போன்றோரின் நன்மைக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது. நிர்மாணக் கைத்தொழில் துறையில் இரண்டு வருட அனுபவமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளும் இப்பாடநெறியை தொடர்வதற்கு அவசியப்படுகின்றன. இப்பபடநெறி ஆறு மாத காலத்தைக் கொண்டது. (வாரத்தில் ஒரு நாள், மொத்தமாக 24 நாட்கள்)

**ஊழியர்களது தேர்ச்சியை மேம்படுத்தும் மேலதிக பயிற்சிகள்**

நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், நிறைவேற்றுனர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் தேர்ச்சியை மேம்படுத்தும் மேலதிக பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிநெறிகளை தொடர்வதற்கு தொழிற்சாலை அனுபவம் மற்றும் கல்வித் தகைமைகள் அவசியம்.

- **Auto CAD 2d & 3D திட மாதிரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இப்பாடநெறி நிர்மாண வடிவமைப்பு நோக்கங்களுக்காக கணினி உதவி வடிவமைப்பு நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான நடைமுறை அறிவை பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.





- **மைக்ரோசொப்ட் ஓப்பீஸ் கருத்திட்டம் 2013 பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

இப்பாடநெறி கருத்திட்டப் பணிகளில் மற்றும் அதனோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபடுவதற்கு இணைவதற்கு ஆர்வமுள்ள ஆர்வலர்களுக்கு நிர்மாண திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பற்றிய நடைமுறை அறிவை வழங்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. MS-Projects s/w.

**வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் மாறிவரும் கேள்விக்கு ஏற்ற விதத்தில் பல்வேறுபட்ட விசேட கேள்வியுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழமையாக வடிவமைத்து அரச மற்றும் தனியார் துறையின் கேள்விக்கு அமைய மிகவும் வெற்றிகரமான முறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் ஆற்றலை CHPBநிறுவனம் கொண்டுள்ளது.







**கருத்தரங்குகளும் செயலமர்வுகளும்**

நிர்மாணக் கைத்தொழில் துறையிலுள்ள பல்வேறுபட்ட தொழில் துறைகளின் கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு மாதாந்தம் கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் விரிவுரைகள், செயற்பாட்டு விளக்கம், கலந்துரையாடல்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகள் என பல்வேறு வழிமுறைகளில் நடாத்தப்பட்டன.













உயர் மின்னியல் - செயலமர்வு     மரவேலை – செயலமர்வு






குழாய் பொருத்தல் - செயலமர்வுஒப்பந்தச் சட்டம் - கருத்தரங்கு






அத்திபாரம் அமைத்தல் - செயலமர்வுமாறிலிகள் - கருத்தரங்கு

**CHPBநிறுவனத்தின் செயல்திறன் - 2015 ஆம் ஆண்டில் பின்வருமாறு**

**CHPBநிறுவனத்தின் செயல்திறன் - 2015**

| **இல** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | **2015 டிசம்பர் வரை நடைபெற்ற பாடநெறிகள்** | **2015 டிசம்பர் வரை பாநெறிகளில் பங்குபற்றியோர்** | **2015 டிசம்பர் வரை ஈட்டப்பட்ட வருமானம் (ரூபா.மில்)** |
|---|---|---|---|---|
| 01 | **கணிய அளவீட்டு பாடநெறிகள** | | | |
| | ❖ சான்றிதழ் பாடநெறி | 04 | 97 | 2.182 |
| | ❖ டிப்ளோமா பாடநெறி | 04 | 140 | 6.603 |
| 02 | **நிர்மாணப் பணிகள் முகாமைத்துவ பாடநெறி** | | | |
| | ❖ முழு நேரம் மற்றும் பகுதி நேரம் | 02 | 24 | 0.889 |
| 03 | **உயர் நிர்மாண முகாமைத்துவ பாடநெறி** | 01 | 20 | 0.470 |
| 04 | **கணினி பாடநெறிகள்** | | | |
| | ❖ ஆளு கருத்திட்டம் | 04 | 92 | 1.084 |
| | ❖ Auto Cad | 03 | 63 | 0.915 |
| 05 | **வழமையாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள்** | | | |
| 5.1 | BOQ விலை நிர்ணயம் மற்றும் விலைவாசி பகுப்பாய்வு | 02 | 100 | 1.179 |
| 5.2 | மொத்த நிலையங்கள் - நிலஅளவை பாடநெறி | 02 | 28 | 0.420 |
| 5.3 | கொண்கிரீட் மற்றும் அத்திபாரம் - NHDA தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 01 | 38 | 0.103 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5.4 | SLT உத்தியோகத்தர்களுக்கான செலவு பயனுறுதி நிர்மாணிப்பு | 01 | 25 | 0.075 |
| 5.5 | இலங்கை ரெலிகொம் உத்தியோகத்தர்களுக்கான குழாய் பொருத்தல் பாடநெறி | 01 | 63 | 0.145 |
| 06 | **கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்** | | | |
| 6.1 | ❖ கொன்கிரீட் தொழில்நுட்பமும் அத்திபார வகைகளும் | 01 | 111 | 0.333 |
| 6.2 | ❖ நிர்மாண ஒப்பந்தங்களில் விலை மாறிலிகள் | 01 | 118 | 0.413 |
| 6.3 | ❖ குழாய் பொருத்தல் தொழில்நுட்பம் | 01 | 101 | 0.303 |
| 6.4 | ❖ செலவு பயனுறுதி வீடுகள் | 01 | 166 | 0.491 |
| 6.5 | ❖ இலத்திரணியல் தொழில்நுட்பம் - வீடுகள் | 01 | 140 | 0.420 |
| 6.6 | ❖ இலத்திரணியல் தொழில்நுட்பம் - தொழிற்சாலைகள் | 01 | 74 | 0.222 |
| 6.7 | ❖ ஒப்பந்த சட்டம் | 01 | 130 | 0.390 |
| 6.8 | ❖ மரப் பலகையை நிர்மாணக் கைத்தொழிலில் பயன்படுத்தல் | 01 | 136 | 0.312 |
| 6.9 | ❖ சூழல் நட்புறவுமிக்க வீடமைப்பு தொழில்நுட்பம் | 01 | 127 | 0.381 |
| | **மொத்த பயிற்சி பாடநெறிகளும் கருத்தரங்குகளும்** | | **1793** | **17.391** |
| 07 | **வேறு வருமானங்கள்** | | | |
| 7.1 | ❖ மண்டப வாடகை (கேட்போர்கூடம், கணினி கூடம் போன்றன) | | | 2.266 |
| 7.2 | ❖ விடுதிகளின் வாடகை | | | 1.207 |
| 7.3 | ❖ வளாக வாடகை | | | 1.160 |
| 7.4 | ❖ வெளியீடுகள் விற்பனை | | | 0.129 |
| | **மொத்தம்** | | | **4.762** |
| | **முழு மொத்தம்** | | | **22.153** |

### 6.5மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் சார்ந்த பொறுப்புக்கள் அதனது பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் அடிப்படைத் தொழிற்பாடுகளாக மனித வள அபிவிருத்தி, மனித வள திட்டமிடல், மனித வளத்தை இனம் காணுவதற்கான தந்திரோபாயங்களை கண்டறிதல், மனித வளப் பாதுகாப்பு, மனித வளத்தின் உற்பத்தித் திறனை கருத்திற் கொண்டு உச்சப் பயனை அடைந்து கொள்வதற்காக பயிற்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள முன்னெடுத்தல், மானிட ஆற்றல் முகாமைத்துவம் மற்றும் மனித வள மூலதன முகாமைத்துவம் என்பனவாகும். நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளும் நிர்வாகமும் சீறான முறையில் இயங்குவதினால்உபாய முறையிலான வர்த்தக மற்றும் செயற்பாட்டு தீர்மானங்களை எடுக்க முகாமைத்துவத்திற்கு முடிந்துள்ளது.

**2015 ஆண்டு அமுல்படுத்தப்பட்ட விசேட செயற்பாடுகள் பின்வருமாறு**



1. 2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை சட்டம் இல 1896/19 மற்றும் 2015.01.06 ஆம் திகதியஅதிவிசேட வர்த்தமான அறிவித்தலுக்கு அமைய 2014.12.29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. அதற்கமைய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) ICTAD நிறுவனத்தின் சட்ட ரீதியான பதில் நிறுவனமாக தாபிக்கப்பட்டது. எனவே அது தொடர்பாக உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு 2015.04.22 ஆம் திகதி சவ்சிறிபாய கேட்போர்கூடத்தில் (CIDA) சட்டத்தை மனிதவளம் மற்றும் கணக்கு செயற்பாடுகளில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய விரிவான கருத்தரங்கு தொடரொன்று நடாத்தப்பட்டது.
2. சட்டத்தின் 65(2) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ICTAD நிறுவனத்தில் பணியாற்றிய ஓய்வுபெறும் வயதை அடையாத தகுதியுள்ள அனைவரும் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளில் எவ்வித குறைபாடும் செய்யப்படாத வகையில் மேற்குறிப்பிட்ட தினத்திலிருந்து CIDA வின் ஊழியர்களாக அந்தந்த தரங்களில் நியமிக்கப்பட்டனர்.
   பதவிகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது :

| இல | ஆளணி வகை | சம்பள குறியீடு | இல |
|---|---|---|---|
| 1 | சிரேஷ்ட முகாமையாளர் | HM 2-1 | 01 |
| 2 | சிரேஷ்ட முகாமையாளர் | HM 1-3 | 05 |
| 3 | நடுத்தர முகாமையாளர் | MM 1-1 | 18 |
| 4 | கனிஷ்ட முகாமையாளர் | JM 1-2 | 24 |
| 5 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | MA 2-2 | 16 |
| 6 | முகாமைத்துவ உதவியாளர்(தொ. நு. சாரா) | MA 1-2 | 71 |
| 7 | ஆரம்ப தரம் (நிபுணத்துவ) | PL-3 | 66 |
| 8 | ஆரம்ப தரம் (பகுதி நிபுணத்துவ) | PL-2 | 04 |
| 9 | ஆரம்ப தரம் (நிபுணத்துவமற்ற) | PL-1 | 34 |
| 10 | பாதுகாப்பு ஊழியர்கள் | | 23 |
| | **மொத்தம்** | | **262** |

3. சட்டத்தின் உட்பிரிவு 65(2) இல் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஊழியர் மேலே குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலப் பகுதிக்குள் CIDA நிறுவனத்தின் சேவையிலிருந்து விலக விரும்புமிடத்து அவருக்கு சட்டத்தின் உட்பிரிவு 65(3) பிரகாரம் அமைச்சரவையின் அனுமதியின் பேரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுயவிருப்ப ஓய்வுபெறுகை (VRS) திட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்படும்.

   அவ்வாறான சுயவிருப்ப ஓய்வுபெறுகை திட்டம் CIDA நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் முன்மொழியப்பட்டு CIDA முகாமைத்துவ சபையின் ஒப்புதலுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படட்ட வண்ணம் உள்ளது.

4. ICTAD நிறுவனம் CIDAநிறுவனமாக மாற்றம் பெற்றது முக்கிய ஒரு மைற்கல்லாகும். ICTAD நிறுவன பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய 2015.12.15 ஆம் திகதி பாராட்டு விழாவொன்று சவ்சிறிபாய கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ICTAD நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர்கள் ஆகியோரினால் ICTAD நிறுவனத்தின் அபிவிருத்திக்காக ஆற்றிய பெறுமதியான பங்களிப்புக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டதோடு 2014 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலுள்ள ICTAD நிறுவனத்தின் ஊழியர்களும் பாராட்டப்பட்டனர். ICTAD நிறுவனத்தின் பின்வரும் சேவை வகுதிகளில் நீண்ட காலம் பணியாற்றியவர்களும் பாராட்டுப் பெற்றனர்.



   - 15 – 20 வருட சேவைக்காலம்
   - 20 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம்

5. CIDAவினது ஒண்றினைந்த திட்டம் CIDA சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் உள்ளக பயிற்சி திட்டமாக அமைந்தது.

6. ஒன்றிணைந்த திட்டத்திற்கு இணைவாக CIDA சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு CIDA வின் நிறுவன கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. CIDA நிறுவனத்தின் ஒன்றிணைந்த திட்டத்திற்கும் நிறுவன கட்டமைப்புக்கும் ஏற்ற வகையில் பதவித் தரங்கள் மற்றும் ஆளணி அடையாளம் செய்யப்பட்டது. CIDA வின் ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த ஊழியர்களும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பணியாற்றும் வகையில் ஒவ்வொரு ஊழியரினதும் பதவிக்கு ஏற்ற வகையில் கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டன.

7. CIDA நிறுவனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் வரைவு செய்யப்பட்டு நிரல் அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் (முகாமைத்துவ சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினது) மீளாய்வு மட்டத்தில் உள்ளது.

**8. புதிய முயற்சிகள்**

CIDA வினது ஊழியர்களின் திறன்கள் மற்றும் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு பல புதிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

8.1 உள்ளக மற்றும் வெளிவாரி வளவாளர்களைக் கொண்டு ஊழியர்களது எண்ணப்பாடுகளையும்

திறன்களையும் மேம்படுத்தக்கூடிய மற்றும் CIDA வின் செயற்பாடுகளோடு நேரடியாக தொடர்புற்ற பல்வேறு துறைகளில் தொடர்ச்சியான தொழில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை (CCDP) நடாத்துதல்.

8.2 ஊழியர்களது வேலைத் தளத்தை சுயாதீனமான, வெளிப்படைத்தன்மையுள்ள மற்றும் சாதாரணமாக வேலை செய்யும் ஆரோக்கியமான சூழலை நிறுவனத்தில் உருவாக்கும் நோக்கத்துடன் CIDA நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் ஒரு உப குழுவாக குறைகளை தீர்ப்பதற்கான குழு அமைக்கப்பட்டது. ஐந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுக்கான குழுவின் பரிந்துரைகள் சபைக்கு முன்னிலைப்படுத்தப்படும்.


8.3 JM மற்றும் அதற்கு மேலுள்ள ஊழியர்களது செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு புதிய நுட்பமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டது. அது சுயமதிப்பீட்டின் மூலம் செயலாற்றுகை மதிப்பீடு என பெயரிடப்பட்டது. அதன் ஆரம்ப அறிக்கையிடும் காலமாக 2015 டிசம்பர் 01 தொடக்கம் 2016 மார்ச் 31 வரையிலான காலப்பகுதியாகும். அதன் வெற்றி தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் அதற்கான விண்ணப்பங்கள் மற்றும் தொடர்புகள் தயாரிக்கப்படும்.

2015.12.31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் மொத்த நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 260 ஆகும். (தவிசாளர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் உட்பட)

2015.01.01 தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பிரிவில் 05 உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்றுள்ளனர். 05 ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர் அத்தோடு 07 ஊழியர்கள் பதவி விலகியுள்ளனர்.

**9. 2015.12.31 ஆம் திகதிக்கு நிரந்தர ஊழியர்களின் சாராம்சம்**

| **ஆளணி வகை** | **இலக்கம்** |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் (HM) | 06 |
| முகாமையாளர் (MM) | 17 |
| கனிஷ்ட முகாமையாளர் (JM) | 24 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | 16 |
| முகாமைத்துவ உதவியாளர்(தொழில் நுட்பம் சாராத) | 71 |
| பாதுகாப்பு ஊழியர்கள் | 23 |
| ஆரம்ப தரம் (நிபுணத்துவ) (PL 3) | 63 |
| ஆரம்ப தரம் (பகுதி நிபுணத்துவ)(PL 2) | 04 |
| ஆரம்ப தரம் (நிபுணத்துவமற்ற) (PL 1) | 34 |
| **மொத்தம்** | **258** |




2015 ஆம் ஆண்டின் போது, அடையாளம் காணப்பட்ட அறிவு இடைவெளியை நிரப்புவதற்கும் சம்பந்தப்பட்ட துறைகளில் ஊழியர்கள் தமது ஆற்றலளவுகளை விருத்தி செய்தி மேம்படுத்திக் கொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டன. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>நிகழ்ச்சித்திட்டம் 01</u> - ஒப்பந்த சட்டம் மற்றும் கம்பனிச் சட்டம்** - கனிஷ்ட முகாமையாளர்களுக்கு மேலுள்ள உத்தியோகத்தரகளுக்கு 2015.04.03 ஆம் திகதி CIDAகேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வளவாளராக பொறியியலாளர். கலாநிதி ஆனந்த ரணசிங்க கலந்துகொண்டார்.

- **<u>நிகழ்ச்சித்திட்டம் 02</u>** – இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் **சட்டமும் நீதியும்** பற்றி 2015.06.08 மற்றும் 2015.07.09 ஆம் திகதியும் CIDA கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டன. அன்றாட தனிப்பட்ட வாழ்வில் ஊழியர்களுக்கு அவசியப்படும் சட்ட விடயங்கள் பற்றிய அறிவை வழங்குவதற்காக நடாத்தப்பட்டது. அனைத்து தரத்தையும் சேர்ந்த ஊழியர்கள் இதில் பங்குபற்றினர். உதாரணமாக– சிரேஷ்ட முகாமையாளர்,முகாமையாளர், கனிஷ்ட முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப), முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத), மற்றும் PL வகுதியைச் சேர்ந்த ஊழியர்களும் இதில் பங்கெடுத்தனர். திரு. ஜீ.வன்னிநாயக்க பிரதி தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் கருத்தரங்கை நடாத்தினார்.

- **<u>நிகழ்ச்சித்திட்டம் 03</u> - அறிக்கை எழுதுதல்** - 2015.06.10 ஆம் திகதி CIDA மாநாட்டு அறையில் CIDA வின் தவிசாளர் பொறியியலாளர் சீ.எச்.டி திசேராவினால் நடாத்தப்பட்டது. உத்தியோகத்தரகளினது தொழில் முறையில் அறிக்கை எழுதும் ஆற்றலை அதிகரித்தல். இதில் கனிஷ்ட முகாமையாளருக்கு மேலுள்ள உத்தியோகத்தர் வகுதியினர் பங்குபற்றினர்.

- **<u>நிகழ்ச்சித்திட்டம் 04</u> - ஊக்கப்படுத்தல்,நேர்மறையான எண்ணப்பாடு மற்றும் குழுச் செயற்பாடு**– 2015.09.23 ஆம் திகதி CIDA கேட்போர்கூடத்தில் பேராசிரியர் சிறி ஹெட்டிகே அவர்களினால் நடாத்தப்பட்டது. சிரேஷ்ட பேராசிரியர், சமூகவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம். இதில் சகல தரங்களையுமுடைய ஆளணியினர் பங்குபற்றினர்.

- **<u>நிகழ்ச்சித்திட்டம் 05</u> –அரசாங்க பெறுகை நடைமுறை** 2015.10.23 ஆம் CIDA கருத்தரங்கு அறையில் நடைபெற்றது. வளவாளராக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஓய்வு பெற்ற மேலதிக பணிப்பாளர் மற்றும் முன்னாள் பணிப்பாளர் தேசிய பெறுகை முகவராண்மை திரு ஜவன் திசேரா கலந்துகொண்டார்.(NPA).இக்கருத்தரங்கில் சிரேஷ்ட முகாமையாளர்கள், கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் ஏற்புடைய முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப) மற்றும் (தொழில்நுட்பம் சாராத) கலந்துகொண்டனர்.

- **<u>நிகழ்ச்சித்திட்டம் 06</u> - தோட் மாஸ்டரஸ் (Toast Masters) உரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**



முகாமைத்துவ மட்டத்திலுள்ளவர்களுக்கான பொது உரை நிகழ்த்தும் திறன் தொடர்பான பத்து நாள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

அதற்கு மேலதிகமாக மேலே குறிப்பிடப்பட்ட மற்றும் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் வளவாளர்களின் உதவியுடன் (SLIDA)நடாத்தப்பட்டது. ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய சித்தியடைய வேண்டிய விணைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளை (E.B) இலக்காகக் கொண்டு ஏற்புடைய சேவை வகுதியனருக்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **<u>நிகழ்ச்சித்திட்டம்</u> 01 –பொது அலுவலக முறைகள் மற்றும் ஒழுக்கம்** -2015.06.24 ஆம் திகதி மற்றும் 2015.08.07 ஆம் திகதி PL 3, PL 2 & PL 1 சேவை வகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தலைமை அவுலகத்திலும் OTC இலும் நடைபெற்றது. வளவாளராக SLIDA நிறுவனத்தின் ஆலோசகர் திருமதி திலினி கரண்ணாகொட (S.L.A.S) கலந்துகொண்டார்.
- **<u>நிகழ்ச்சித்திட்டம்</u> 02 –அலுவலக முறைகள் மற்றும் பொது நிர்வாகம்** - ஏற்புடைய முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப) மற்றும் (தொழில்நுட்பம் சாராத) ஊழியர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டம் 2015.06.24 ஆம் திகதி CIDA கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.வளவாளராகSLIDA நிறுவனத்தின் ஆலோசகர் திரு ஏ.எச்.எம்.எல். அபேரத்ன(S.L.A.S) கலந்துகொண்டார்.

❖ **<u>நிகழ்ச்சித்திட்டம்</u> 03 - அலுவலக முறைகள் மற்றும் பொது நிர்வாகம் -** இந்நிகழ்ச்சித்திட்டம் கனிஷ்ட முகாமையாளர்களுக்கும் அதற்கு மேலுள்ள தரத்தினருக்கும் 2015.06.30 ஆம் திகதி CIDA கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. வளவாளராக SLIDA நிறுவனத்தின் ஆலோசகர் திருமதி திலினி கரண்ணாகொட (S.L.A.S) கலந்துகொண்டார்.

❖ **<u>நிகழ்ச்சித்திட்டம்</u> 04 –கணக்கீட்டு முறைகள், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க நிதி முகாமைத்துவம் -** இந்நிகழ்ச்சித்திட்டம் முகாமையாளர்கள், கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 2015.07.23 ஆம் திகதி CIDA கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. SLIDA நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் / கணக்காளர் திரு பி.டி. குலரத்ன கலந்துகொண்டார்.

- **வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள்**

உள்நாட்டு பயிற்களை வழங்கும் அதே சமயத்தில் புதிய தொழில் அறிவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் CIDA வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. 2015 ஆம் ஆண்டு 05 சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் கூட்டு சமூகப் பொறுப்பு என்ற ரீதியில் NAITAநிறுவனத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்ட பயிலுனர்களைப் பயிற்றுவிக்க நிறுவனத்தினால் இயலுமாகவிருந்தது. தொழில் நுட்பவியலாளர்,சுருக்கெழுத்தாளர், கணனி இயக்குனர்கள், வரவேற்பாளர்கள் போன்ற வகுதிகளையே பயிற்சியாளர்கள் சேர்ந்திருந்தனர்.

மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவும் வருமான ஈட்டலுக்கு பங்களிப்புச் செய்துள்ளன. சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு கேட்போர்கூடம், மாநாட்டு மண்டபம், கருத்தரங்கு அறைகள் மற்றும் கதிர்காம சுற்றுலா விடுதி என்பவற்றினூடாக ரூபா.3,646,445.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**2015 ஆம் ஆண்டில் ஆளணி அபிவிருத்தி**
**உள்நாட்டு பயிற்சிகள்**

| இல | பெயர் | பதவி | பிரிவு | நிகழ்ச்சித்திட்டம் | நிறுவனம் | காலப் பகுதி | பாடநெறிக் கட்டணம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செல்வி கே.வீ.ஜயதிஸ்ஸ | நூலகர் -II | மனிதவள மற்றும் நிர்வாகம் | இலங்கை நூலகங்களில் பயன்படுத்தப்படும் நூலக முகாமைத்துவ மென்பொருள் | தேசிய விஞ்ஞான மன்றம் | 2015.01.30 | _ | _ |
| 2 | திரு. எஸ்.கே. அமரசேகர | பணிப்பாளர் (நிர்வாகம்) | அபிவிருத்தி | 4 ஆவது CIOB உலக நிர்மாணத்துறை சிம்போசியம் - 2015 | கட்டுநர்களின் இலங்கை நிறுவனம் | 2015.06.12 & 13 | 10,000.00 | _ |
| 3 | திரு. ஆர்.பீ.எம்.குனவர்தன | பணிப்பாளர் (ஆலோசனை சேவைகள்) | ஆலோசனை சேவைகள் | 4 ஆவது CIOB உலக நிர்மாணத்துறை சிம்போசியம் - 2015 | கட்டுநர்களின் இலங்கை நிறுவனம் | 2015.06.12 & 13 | 10,000.00 | _ |
| 4 | செல்வி சீ.எஸ்.கருணாரத்ன | பிரதிப் பணிப்பாளர் (ஆலோசனை சேவைகள்) | ஆலோசனை சேவைகள் | உயர் சான்றிதழ் பாடநெறி – ஒப்பந்தம் மற்றும் பெறுகை முகாமைத்துவம் (பாடநெறி இல – 06) | CIDA | 2015 | _ | CIDAநிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 5 | செல்வி. கே.ஏ.சீ. அல்விஸ் | சட்ட அலுவலர் மற்றும் சபை செயலாளர் | மனிதவள மற்றும் நிர்வாகம் | _ மேலுள்ளது _ | CIDA | 2015 | _ | |
| 6 | திரு. பி.ஏ.பி. வீரசேகர | பிரதிப் பணிப்பாளர் / முகாமையாளர் | CETRAC | _ மேலுள்ளது _ | CIDA | 2015 | _ | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | திரு. ஆர்.எம்.ஆர். பண்டார | தொழில்நுட்ப உதவியாளர் | OTC | _ மேலுள்ளது _ | CIDA | 2015 | _ | |
| 8 | செல்வி கே.வீ.ஜயதிஸ்ஸ | நூலகர் -II | மனிதவள மற்றும் நிர்வாகம் | வலையமைப்பு தொடர்பாடல் முகாமைத்துவத்தின் புதிய பரிமாணங்கள் பற்றிய கருத்தரங்கு | தேசிய விஞ்ஞான மன்றம் | 2015.07.13 | _ | _ |
| 9 | திரு. ஏ.ஜீ.சி.என்.சுமித் | முகாமைத்துவ உதவியாளர் | மனிதவள மற்றும் நிர்வாகம் | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015.07.23 | 6,000/- | _ |
| 10 | திருமதி. எல்.பீ.பி. பாலசூரிய | கணக்கு உத்தியோகத்தர் | நிதி | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015. 09 08 | 5,400.00 | _ |
| 11 | திருமதி. கே.கே.சந்திரகாந்தி | முகாமைத்துவ உதவியாளர் பதில் கடமை கணக்கு உத்தியோகத்தர் | நிதி | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015. 09 09 | 5,400.00 | _ |
| 12 | திருமதி. பீ.ஜீ.எஸ்.கே. கருணாரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | நிதி | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015. 09 10 | 5,400.00 | _ |
| 13 | செல்வி. எச்.ஏ.ஓ.ஐ. பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | நிதி | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015. 09 11 | 5,400.00 | _ |
| 14 | செல்வி. ஆர்.ஏ.கே.எஸ்.எச்.எம். ரணதுங்க | முகாமைத்துவ உதவியாளர் | நிதி | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | PRAG நிறுவனம் | 2015. 09 12 | 5,400.00 | _ |
| 15 | திரு. கே.ஏ.எஸ். ஸ்டேன்லி | உதவிப் பணிப்பாளர் | கைத்தொழிற் பயிற்சி | சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் | I E S L | 05 சனிக்கிழமைகள் 2015.08.08 | 22,000.00 | _ |
| 16 | செல்வி கே.வீ.ஜயதிஸ்ஸ | நூலகர் -II | மனிதவள மற்றும் நிர்வாகம் | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான சர்வதேச மாநாடு( ICLIS) | Sri Lanka Library Association | 2015.09.17 & 18 | 6,000.00 | _ |
| 17 | திருமதி. ஐ.எம். குணசேகர | உதவிப் பணிப்பாளர் (பதில் கடமை) (IA) | மனிதவள மற்றும் நிர்வாகம் | நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் (தொங்கல் கணக்கு 2015) | PRAG நிறுவனம் | 2015.09.29 | 6,000.00 | _ |
| 18 | திருமதி. ஐ.எம். குணசேகர | உதவிப் பணிப்பாளர் (பதில் கடமை) (IA) | மனிதவள மற்றும் நிர்வாகம் | 2016 ஆண்டுக்கான பெறுகை திட்டத்தை தயாரித்தல் | PRAG நிறுவனம் | 2015.10.13 | 6,000.00 | |
| 19 | திரு டபிள்யு.ஏ.ஏ. விஜேசிங்க | நிர்வாக உத்தியோகத்தர் | மனிதவள மற்றும் நிர்வாகம் | உயர் தேசிய டிப்ளோமா - மனித வளம் | N I B M | 2014 தொடக்கம் செப்-2015 | 55,000.00 | |
| | தொடரான தொழில் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | | | |
| 20 | கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேலுள்ள தரங்கள் | | | கம்பனி சட்டம் மற்றும் ஒப்பந்தச் சட்டம் | CIDA | 2015.04.30 | 6500* | *ஒரு மதிப்பூதியம் |
| 21 | சகல ஆளணியும் | | | சட்டமும் நீதியும் | CIDA | 2015.06.08 & 2015.07.09 | | |
| 22 | கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேலுள்ள தரங்கள் | | | அறிக்கை எழுதுதல் | | 2015.06.10 | | |
| 23 | சகல ஆளணியும் | | | நேர்மறையான எண்ணப்பாடுகள் மற்றும் குழுச் செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு | | 2015.09.23 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24 | கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேலுள்ள தரங்கள் மற்றும் ஏற்புடைய மு.உ | | | அரசாங்க பெறுகை நடைமுறை | | 2015.10.20 & 2015.10.23 | 30,000.00 | |
| 25 | முகாமைத்துவ ஆளணி | | | Toast Master நிகழ்ச்சித்திட்டம் | | 10 நாட்கள் | 200,000.00 | |
| | வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை இலக்ககாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | | | |
| 26 | PL வகுதி ஆளணி | | | பொது அலுவலக நடைமுறைகள் மற்றும் ஒழுக்கங்கள் | CIDA | 24.06.2015 & 07.08.2015 | 24,000.00 | வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை இலக்காகக் கொண்ட உள்ளக நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 27 | முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப) மற்றும் (தொழில்நுட்பம் சாராத) | | | அலுவலக முறைகள் மற்றும் பொது நிர்வாகம் | | | | |
| 28 | கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேலுள்ள தரங்கள் | | | அலுவலக முறைகள் மற்றும் பொது நிர்வாகம் | | 30.06.2015 | | |
| 29 | முகாமையாளர்கள், கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் மு.உ வகுதி | | | கணக்கீட்டு முறைகள், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி முகாமைத்துவம் | | 23.07.2015 | | |
| 30 | PL வகுதி ஆளணி (OTC) | | | பொது அலுவலக நடைமுறைகள் மற்றும் ஒழுக்கம் | OTC | 07.08.2015 | | |
| | | | | | | | | |

## ஆளணி அபிவிருத்தி - 2015
## வெளிநாட்டுப் பயிற்சிகள்

| தொ. இல | பெயர் | பதவி | பிரிவு | நிகழ்ச்சித்திட்டம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி. ஜே.ஏ.என்.என்.கே.ஜயகொடி | பணிப்பாளர் (E M S) | CETRAC | இயந்திர பரிசோதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - யப்பான் | 2015.04.06 - 2015.04.10 |
| 02 | திரு ஆர்.பி.பி. பெரேரா | பயிற்சி உத்தியோகத்தர் | CETRAC | இயந்திர பரிசோதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - யப்பான் | 2015.04.06 - 2015.04.11 |
| 03 | திரு. டி.பி.கே. ஒபேசேகர | பயிற்சி உத்தியோகத்தர் | CETRAC | இயந்திர பரிசோதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - யப்பான் | 2015.04.06 - 2015.04.12 |
| 04 | திரு. எச்.என். உதய குமார | போதனாசிரியர் | CETRAC | இயந்திர பரிசோதனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - யப்பான் | 2015.04.06 - 2015.04.13 |
| 05 | கட்டடக் கலைஞர். திரு எச்.கே. பாலச்சந்திரா | பணிப்பாளர் நாயகம் | H R & A | ஆசிய நாடுகளின் செலவு குறைந்த வீடமைப்பு – புத்தாக்குனர்களுக்கான பாடநெறி | 2015.12.06 - 2015.12.19 |

## 6.6 நிதிப் பிரிவு

### 1.1 பொதுவானவை

நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD)2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டத்தின் கீழ் (CIDA) நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபையாக மாற்றப்பட்டது.தற்பொழுது ICTAD நிறுவனத்தின் சட்டரீதியான பதில் நிறுவனமாகCIDA விளங்குகின்றது.
நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபையானது (CIDA)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தினால் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டம் இல 1896/19 மற்றும் 2015 சனவரி 06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 1 இல் பிரசுரிக்கப்பட்டதற்கிணங்க 2014 டிசம்பர் 29 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. CIDAநிறுவனம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்குகின்றது. அது கொழும்பு 07, விஜேராம மாவத்தை, இல 123 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 அடிப்படை செயற்பாடுகளும் தொழிற்படும் தன்மையும்

தேசியகொள்கைச் சட்டகத்திற்குள்ளால்நிர்மாணத்துறையில் பயிற்சி,நிபுணத்துவம் மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றை விருத்தி செய்து வசதியளிப்பதன் மூலம் சிறந்த ஒழுங்குபடுத்தல் ஊடாக தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் எமது நாட்டை கட்டியெழுப்புதல்.

### 1.3 ஆளணி எண்ணிக்கை

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுCIDAநிறுவனத்தின் மொத்த ஆளணி 256 ஆகும். அது 2014 ஆம் ஆண்டில் 263 ஆக இருந்தது.

### 1.4 நிதியாண்டு

2015 சனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையக் கூடிய நிதி ஆண்டாகும்.

## 2.குறிப்பிடத்தக்க நிதிக் கொள்கைகள்

### 2.1 நிதி அறிக்கை தயாரிப்பின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டவை

CIDAநிறுவனத்தின் நிதி அறிக்கை ஒரு வரலாற்று செலவுக்கு அமைய இலங்கை ரூபாய் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2 நிதி அறிக்கை பதிவுகள்

CIDAநிறுவனத்தின் நிதி அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது கணக்கு பதிவு தர நிலமைகள் நடைமுறைகளுக்கு (SLPSAS)எற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.அத்தோடு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இலங்கை கணக்கியல் தரங்களும் (SLPSAS) கணக்கீட்டுத் தரங்கள் பயன்படுத்தப்படாத துறைகளில் பயன்படுத்தப்பட்டன.

## 2.3. சொத்துக்களும் மதிப்பீட்டின் அடிப்படைகளும்

1.3.1 ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் நிதி அறிக்கையில் குறை தேய்மானத்தை பதிவு செய்துள்ளன.

ஆதனம், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவுகள் ஏதேனும் சந்தர்ப்பச் செலவுகளுடன் கூடிய மறு மதிப்பீட்டு பெறுமதிகள் அல்லது கொள்வனவுச் செலவுகள் என்பவற்றைக் குறிக்கும்.

2.3.2 சகல ஆதனங்கள், ஆலை மற்றும் கருவிகள் என்பவற்றின் செலவையும் தள்ளுபடி செய்வதற்கு அவற்றின் எஞ்சிய பெறுமானங்களின்சிறந்த பாவனைக்காக வேண்டி பெறுமானத் தேய்வு நேரக வரி முறையை அடிப்படையாகக் கொண்டு சமமான தவணைக் கட்டணங்களாக கணக்கிடப்பட்டன. 2015 ஆம் ஆண்டிலிருந்து செல்லுபடியாகும் விகிதங்கள் பின்வருமாறு

| விடயம் | ஆயுள் காலம் | விகிதம் (%) |
|---|---|---|
| காணி | | 0.0 |
| கட்டிடங்களும் கட்டிடங்கள் மேம்படுத்தலும் | 40 | 2.5 |
| தளபாட பொருத்தல்கள் மற்றும் அலுவலக சாதனங்கள் | 5 | 20.0 |
| இயந்திர சாதனங்கள் | 8 | 12.5 |
| ஆடியோ விஷுவல் சாதனங்கள் | 4 | 25.0 |
| கருவிகளும் சாதனங்களும் | 5 | 20.0 |
| மோட்டார் வாகனங்கள் | 8 | 12.5 |
| நூலக புத்தகங்கள் | 5 | 20.0 |

ஆதனங்கள், ஆலை மற்றும் கருவிகளின் தேய்மானக் கட்டணங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டன. மேலும் அவைகள் பாவனையில் உள்ள நிலையிலேயே அவற்றின் தேய்மானங்கள் கணக்கிட ஆரம்பிக்கப்பட்டன. நிரந்தரக் காணிகளுக்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

## 2.4 CIDA நிறுவனத்தின் அசையா சொத்துக்கள் பின்வருமாறு

| சொத்தின் விபரம் | உரிமை / வாரிசு | நிலை |
|---|---|---|
| சவ்சிறிபாய, கொழும்பு 07 இல் அமைந்துள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைக் அலுவலகக் கட்டிடம் | இந்த கட்டிடம் ICTAD நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமைக் கொண்டுள்ளன. | இந்தச் சொத்து UDA (எமது நிறுவனம் சார்பாக)மற்றும் டவர்ஹோல் உடனான குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. அவ்வொப்பந்தம் 2016.05.14 ஆம் திகதி முடிவடையவுள்ளது. |

| | | |
|---|---|---|
| வீடமைப்பு, திட்டமிடல் மற்றும் கட்டிட மையம், பத்தரமுல்லை. (CHPB) | இந்த கட்டிடம் ICTAD நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமை கொண்டுள்ளன. | இந்தக் காணி UDA வுக்கு சொந்தமானது 99 வருட குத்தகை அடிப்படையில் ICTAD நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ளது. |
| இயக்குநர் பயிற்சிக் கல்லூரி,கல்குலம. (OTC) | அரசாங்க காணி. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமைக் கொண்டுள்ளன. | திருப்பனை பிரதேச செயலகத்தின் ஆதிக்கத்தின் கீழ் இக்காணி உள்ளது. |
| நிர்மாணக் கருவிகள் பயிற்சி நிலையம் (CETRAC) | இந்த கட்டிடம் ICTAD நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமைக் கொண்டுள்ளன. | இந்தக் காணி UDA வுக்கு சொந்தமானது 99 வருட குத்தகை அடிப்படையில் ICTAD நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ளது. |
| சுற்றுலா விடுதி, தஹையாகம | காணி மற்றும் கட்டிடம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NHDA) சொந்தமானது. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமைக் கொண்டுள்ளன. | காணியும் கட்டிடமும்தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NHDA) சொந்தமானது. |
| சுற்றுலா விடுதி, திஸ்ஸமகாராமை | காணி மற்றும் கட்டிடம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NHDA) சொந்தமானது. தற்போது ICTAD / CIDA நிறுவனங்கள் அக்கட்டிடத்தில் உரிமைக் கொண்டுள்ளன. | காணியும் கட்டிடமும்தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NHDA) சொந்தமானது. |

**2.5 பொருட் பதிவேடு**

உதிரிப் பாகங்கள், பராமரிப்புப் பொருட்கள், சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் காகிதாதிகள் என்பன பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படும். சராசரி செலவு அடிப்படையில் அவை பதியப்படும்.

**2.6** குறிப்பிட்ட காணிக்கான குத்தகை வாடகை குத்தகை காலத்தில் சம தவணைகளில் தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.7** கையிருப்பு பெறுமதி ரூபா. 133,111,692.58

**2.8 வருமதிகள்**

பெறமுடியாத ஐயக் கடன்களினது தேறிய எற்பாடுகளை மதிப்பீடு செய்து உணர்வதற்காக வரவுகளின் பெறுமாணங்கள் அறிக்கையிடப்பட்டன.
2010.12.31 திகதி வரைக்குமான கடனாளிகளின் கணக்குகளை தீர்வு செய்வதற்காக அவை தீர்வை கணக்கிற்கு மாற்றப்பட்டன.

## 2.9 கிடைக்கப் பெறாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்

கிடைக்கப் பெறாத மற்றும் ஐயக் கடன்கள் கணக்கிடப்பட்டு பின்வருமாறு கணக்குகளில் காட்டப்படுகின்றன.

| தீர்க்கப்படாத காலம் | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் |
|---|---|
| 12 மாதங்களுக்கு குறைவானவை | இல்லை |
| 1 வருடம் முதல் 2 வருடம் வரை<br>2 வருடம் முதல் 3 வருடம் வரை<br>3 வருடம் முதல் 4 வருடம் வரை<br>4 வருடம் முதல் 5 வருடம் வரை | 5% |
| 5 வருடங்களுக்கு மேற்பட்டவை | 100% |

## 2.10 காசு மற்றும் காசு மாற்றீடுகள்

காசு மற்றும் காசு மாற்றீடுகள் மூதலீடுகள், காசு கையிருப்பு மற்றும் வங்கி இருப்பு என்பவற்றைக் கொண்டிருக்கும்.

## 2.11 நானாவித வருமானம்

பொதுத் திறைசேரியிலிருந்து மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடுகள் நானாவித வருமானத்திற்குள் உள்ளடக்கப்படும்.
மூலதன ஒதுக்கீடுகள் நானாவித வருமானங்கள் என்ற அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றன. அவை சொத்துக்களின் சிறந்த பாவனையைப் பொறுத்து முறையான மற்றும் பகுத்தறிவு ரீதியான ஒரு வருமானமாக கொள்ளப்பட்டது.

## 2.12 ஓய்வூதிய பணிக் கொடைகளுக்கான ஒதுக்கீடுகள்

நிறுவனம் வருடாந்தம் ஊழியர்களுக்கான பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகளை செய்து வருகின்றது. இது பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. நிரந்தர ஊழியர் ஒருவர் பூரணமாக பூர்த்தி செய்யும் ஒவ்வொரு வருடத்தினதும் ஆகக் குறைந்தது ஒரு மாத சம்பளத்தின் அரை பங்கு வருடாந்த மதிப்பீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஊழியரது அரம்ப வருடத்தில் வரையப்பட்ட சம்பளம் இங்கு பணப் பெறுமதிக்காக கொள்ளப்படுகின்றது. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய தொடர்ச்சியான 5 வருட சேவைக் காலத்தைக் கொண்ட ஊழியர்களே அதற்கு தகுதி பெறுகின்றனர்.

## 2.13 அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள்

### 2.13.1 மீண்டெழும் ஒதுக்கீடுகள்

அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீடுகள் CIDA நிறுவனத்தினது வருமான அறிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 2.13.2 மூலதன ஒதுக்கீடுகள்

அரசாங்கத்திடமிருந்து காசாக கிடைக்கப்பெற்ற மூலதன ஒதுக்கீடுகள் நானாவித வருமானங்கள் என்ற அடிப்படையில் கிடைக்கப் பெற்றன. அவை சொத்துக்களின் சிறந்த பாவனையைப் பொறுத்து முறையான மற்றும் பகுத்தறிவு ரீதியான ஒரு வருமானமாக கொள்ளப்பட்டது.

### 2.13.3 மூலதன ஒதுக்கீடுகள்

ரூபா 64,583,433.79 மூலதன ஒதுக்கீட்டின் கீழ் ஆதனங்கள், ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

## 2.14 வருவாய் அங்கீகாரம்

நிறுவனம் பின்வரும் மூலங்களிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றது. வருமானம் சேர் அடிப்படையிலான கணக்கு நோக்கங்களுக்காக இத்தகைய வருமானங்களை அங்கீகரிக்கின்றது.

(அ) இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்
(ஆ) பாடநெறிக் கட்டணங்கள்
(இ) வெளியீடுகள் விற்பனை
(ஈ) கேட்போர் கூடம், மாநாட்டு அறை, கருத்தரங்கு அறைகள் வாடகை
(உ) கருத்தரங்குகளும் செயலமர்வுகளும்

## 2.15 செலவு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை கணக்கு விதிகளுக்கு ஏற்ப வருமான சேர் அடிப்படையில் அனைத்து செலவுகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## 2.16 சட்ட நடவடிக்கைகள்

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் தொழில் நியாய சபையிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையில் உள்ளன. அவை தொடர்பான தகவல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை(CIDA)**
**நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) சட்டரீதியான பதில் நிறுவனம்**
**2015.12.31 ஆம் திகதியன்று உள்ள வழக்குகள்**

| வழக்கு இல | நீதிமன்றம் / நிறுவனம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| திரு. டபிள்யு.டீ.விதாரண | தொழில் திணைக்களம் | EPF நிலுவைக் கொடுப்பனவு<br>EPF நிலுவையை கணக்கிடுவதற்கு தேவையான ஆவணங்கள் தொழில் திணைக்களத்திற்கு சமரப்பிக்கப்பட்டுள்ளன.<br>கொடுப்பனவு செலுத்துவதற்கு காலம் தேவவைப்படுகின்றது.<br>தொழில் திணைக்களத்திலிருந்து கடிதத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளோம். |
| திரு. எம்.ஜீ.கொலம்பகே | தொழில் திணைக்களம் | பணிக்கொடை நிலுவைக் கொடுப்பனவு<br>பணிக்கொடை நிலுவையை கணக்கிடுவதற்கு தேவையான ஆவணங்கள் தொழில் திணைக்களத்திற்கு சமரப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>கொடுப்பனவு செலுத்துவதற்கு காலம் தேவவைப்படுகின்றது. |
| திரு. டபிள்யு.டீ.விதாரண | தொழில் திணைக்களம் | பணிக்கொடை நிலுவைக் கொடுப்பனவு<br><br>பணிக்கொடை நிலுவையை |

| | | |
|---|---|---|
| | | கணக்கிடுவதற்கு தேவையான ஆவணங்கள் தொழில் திணைக்களத்திற்கு சமரப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>தொழில் திணைக்களத்திலிருந்து கடிதத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளோம். |
| திரு. டபிள்யு.டீ.விதாரண | தொழில் நியாய சபை | சேவை மாற்றம்<br>வழக்கு விசாரிக்கப்படுகின்றுத |
| திரு. எம்.கே.மிரண்டா | தொழில் நியாய சபை | சேவை மாற்றம்<br>வழக்கு விசாரிக்கப்படுகின்றது |
| திரு. பி.பீ.எச்.குலசிங்க | தொழில் நியாய சபை மற்றும் மேல் நீதிமன்றம் கொழும்பு | சேவை மாற்றம்<br>ஊழியர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டார்.<br><br>நிலுவைச் சம்பள காசோலை ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>காசோலையின் பெறுமதி கணக்கிடப்பட்ட விதம் குறித்து ஊழியர் கேள்வி எழுப்பியுள்ளார்.<br><br>இந்த விடயம் CIDA வின் மனக்குறை நிவர்த்திக்கும் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>குழுவின் தீர்மானம் எதிர்பாரக்கப்பட்டுள்ளது. |

## நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை(CIDA)

## நிதி நிலமை கூற்று

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

| விவரணம் | குறிப்பு | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்**<br>**மீண்டுவரும் சொத்துக்கள்** | | | |
| காசு கையிருப்பு வங்கியில் | 1 | 149,266,960.70 | 64,105,008.89 |
| முதலீடுகளும் திறைசேரி உண்டியல்களும் (தேய்மான நிதி) | 2 | - | 15,707,803.00 |
| தொழிலும், வேறு கிடைக்க வேண்டியவைகளும் | 3 | 56,243,994.68 | 20,649,479.87 |
| கையிருப்புக்கள் | 4 | 133,111,692.58 | 138,766,770.41 |
| முன்- கொடுப்பனவுகள் | | 1,212,531.51 | 2,025,158.01 |
| | | **339,835,179.47** | **241,254,220.18** |
| நடந்து கொண்டிருக்கம் மூலதன வேலை | | 41,347,582.20 | 49,287,934.16 |
| **நடைமுறை சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்கள் | 5 | 935,544,721.56 | 936,667,416.50 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,316,727,483.23** | **1,227,157,570.84** |
| **பொறுப்புக்கள்**<br>**நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்வழங்குனர்களும், திரண்டவைகளும் | 6 | | |
| | | **80,388,350.09** | **94,975,003.42** |
| **நடைமுறை சாராத பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தவேண்டிய பணிக்கொடைக்கான ஏற்பாடு | 7 | 61,791,488.71 | 59,743,932.55 |
| மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவி | | 2,663,658.98 | 2,663,658.98 |
| | | **64,455,147.69** | **62,407,591.53** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்பும்** | | **144,843,497.78** | **157,382,594.95** |
| **நிகர சொத்துக்கள்** | | **1,171,883,985.45** | **1,069,774,975.89** |
| **நிகர சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| அரசாங்கத்திலிருந்து வாக்களிக்கப் பட்ட நிதியங்கள் | 8 | 527,367,186.34 | 418,580,503.21 |
| நிகர சொத்துக்கள் ICTAD இடமிருந்து பெறப்பட்டவை | 9 | 25,449,909.19 | 149,907,162.02 |
| மீள் மதிப்பிடல் - நிரந்தர சொத்துக்கள் | 10 | 625,744,563.49 | 625,744,563.49 |
| திரண்ட மிகை / (பற்றாக்குறை) | 11 | (6,677,673.57) | (124,457,252.83) |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ பங்குகள்** | | **1,171,883,985.45** | **1,069,774,975.89** |

குறிப்பிடத்தக்க நிதிக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் பக்கம் 06 தொடக்கம் 22 வரை இந்த நிதி அறிக்கையில் நேர்மையாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**உறுதிப்படுத்தல்**

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குரிய 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆணடுக்கான அதன் மிகை / (பற்றாக்குறை) பற்றிய மேற்குறிப்பிட்ட நிதி அறிக்கை சரியானது என்றும் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

**கே.எம்.எஸ்.மங்கலிகா**
**பணிப்பாளர் (நிதி)**
**CIDA**

**கட்.கலைஞர் எச்.கே.பாலச்சந்திரா**
**பணிப்பாளர் நாயகம்**
**CIDA**

**சீ.எச்.டி.திசேரா**
**தவிசாளர் மற்றும் உறுப்பினர்**
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை முகாமைத்துவக் குழு**

**பொறி. எல்.டபிள்யு பாலித்த**
**உறுப்பினர்**
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை முகாமைத்துவக் குழு**

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**
**2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும்**
**ஆண்டுக்கான நிதி முன்னேற்றம்**

| விவரணம் | குறிப்பு | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 12 | 199,507,051.82 | 207,724,114.78 |
| கழிக்குக:<br>வருமான தோற்றுவிப்புச் செயற்பாடுகளின் செலவினங்கள் | 13 | 207,557,347.27 | 213,612,043.59 |
| **இலாபம் / (நஷ்டம்) வருமானத் தோற்றுவிப்பு** | | (8,050,295.45) | (6,144,099.81) |
| திறைசேரி உதவு தொகை- CETRAC | | 12,000,000.00 | 14,100,000.00 |
| அமைச்சு உதவு தொகை | | - | 16,320,000.00 |
| திறைசேரி உதவு தொகை- திறன் விருத்தி | | 53,150,000.00 | - |
| திறைசேரி உதவு தொகை- தலைமை அலுவலகம் | | 8,000,000.00 | 17,929,999.28 |
| திறைசேரி உதவு தொகை- பராமரிப்பு | | | 21,400,000.00 |
| | | 78,393,799.55 | 63,605,899.47 |
| திறைசேரி உதவு தொகை–மீண்டுவரும் | | 30,000,000.00 | 28,016,000.00 |
| வேறு வருமானம் | 14 | 32,993,329.83 | 39,428,828.99 |
| கழிக்குக: | | | |
| நிருவாகச் செலவினங்கள் | 15 | 59,984,398.54 | 52,345,983.42 |
| வேறு செலவினங்கள் | 16 | 21,494,284.29 | 29,978,245.93 |
| நிதி ஆகுசெலவு | | 372,048.73 | 409,844.18 |
| **மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாட்டுக்கு முன்னரான லாபம்/(நஷ்டம்)** | | 59,536,397.82 | 48,316,654.93 |
| **கழிக்குக:** | | | |
| மதிப்பிறக்கம் | 17 | 65,284,666.37 | 68,931,081.81 |
| சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாட்டுகளுக்கான முன்னரான லாபம் /(நஷ்டம்) | | (5,748,268.55) | (20,614,426.88) |
| கழிக்குக:<br>கிடைக்காததும், சந்தேகத்திற்குரியதுமான கடன்களுக்கான | | 929,405.02 | -<br>(229,670.79) |
| ஏற்பாட்டுகளுக்கான காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம் | | (6,677,673.57) | (20,384,756.09) |

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

**2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலத்திற்கான நிகர சொத்துக்கள் / ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று**

| | ஒருமித்த மிகை / பற்றாக்குறை | திரண்ட– நிலையான சொத்துக்கள் | பல்வேறுபட்ட வருமானம் - திறைசேரி மானியம் | மானியம் | நிலையான சொத்துக்கள் (ICTAD) நிறுவனத்திற்கு பெறப்பட்டது 1992.06.09 | நிலையான சொத்துக்கள் (ICTAD) நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது 2014.12.31 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| முன் கொண்டு வந்த ஆரம்ப மீதி 2013.12.31 | (171,320,042.01) | 259,369,929.03 | 371,215,686.51 | 121,649,558.36 | 149,907,162.02 | - | 730,822,293.91 |
| நிதி மதிப்பீடுகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் | 67,247,545.27 | | | | | | 67,247,545.27 |
| | (104,072,496.74) | 259,369,929.03 | 371,215,686.51 | 121,649,558.36 | 149,907,162.02 | | 798,069,839.18 |
| காலத்திற்கான நிகர மேன்மிகை அல்லது(பற்றாக்குறை) | (20,384,756.09) | | | - | | | (20,384,756.09) |
| திறைசேரி மானியங்கள் - மூலதனம் | - | - | 62,900,000.00 | | | | 62,900,000.00 |
| பல்வேறுபட்ட வருமானம் - திறைசேரி மானியங்கள் | - | - | (29,977,186.24) | | | | (29,977,186.24) |
| JBIC – மானியம் - திரண்ட செலவு | | | - | (32,665,581.62) | | | (32,665,581.62) |
| UNDP - மானியம் - திரண்ட செலவு | | | | (73,179,523.80) | | | (73,179,523.80) |
| JICA – நிதியுதவி – (Cetrac நூலக புத்தகங்கள்) | | | | (1,310,450.00) | | | (1,310,450.00) |
| மானியம் - அமைச்சு 2010 (சொத்துக்கள்) | | | 207,540.00 | (207,540.00) | | | - |
| மானியம் - GIZ 2013 (சொத்துக்கள்) | | | 14,234,462.94 | (14,234,462.94) | | | (52,000.00) |
| மிகை மீள்மதிப்பு 2011(Cetrac நூலக புத்தகங்கள்) | | 1,310,450.00 | - | | | | 1,310,450.00 |
| பற்றாக்குறை மீள்மதிப்பு2012(Cetrac இயந்திரங்கள்) | | (1,662,554.42) | | | | | (1,662,554.42) |
| மிகை மீள்மதிப்பு 2014 | | 366,726,738.88 | | | | | 366,726,738.88 |
| **2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் கொண்டு சென்ற மீதி** | **(124,457,252.83)** | **625,744,563.49** | **418,580,503.21** | **-** | **149,907,162.02** | **-** | **1,069,744,975.89** |
| நிதி மதிப்பீடுகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் | - | - | - | - | - | - | - |
| | (124,457,252.83) | 625,744,563.49 | 418,580,503.21 | - | 149,907,162.02 | - | 1,069,744,975.89 |
| மிகை / பற்றாக்குறை குறிப்பிட்ட காலத்திற்கு | (6,677,673.57) | - | - | - | - | - | (6,677,673.57) |
| திறைசேரி மானியங்கள் - மூலதனம் | - | - | 133,215,000.00 | | | | 133,215,000.00 |
| பல்வேறுபட்ட வருமானம் - திறைசேரி மானியங்கள் | | | (24,428,316.87) | | | | (24,428,316.87) |
| ஒருமித்த மிகை 2014.12.31 | (124,457,252.83) | | | | | (124,457,252.83) | |
| ICTAD நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் 2014.12.31 | | | | | (149,907,162.02) | 149,907,162.02 | |
| **2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் கொண்டு சென்ற மீதி** | **(6,677,673.57)** | **625,744,563.49** | **527,367,186.34** | **-** | **-** | **25,449,909.19** | **1,171,883,985.45** |

# நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

## 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலத்திற்கான பணப் புழக்க கூற்றின் மறைமுகமான முறை

| விவரணம் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மேன்மிகை/(பற்றாக்குறை) | (6,677,673.57) | (20,384,756.09) |
| **பணம்சாரா பெயர்ச்சிகள்** | | |
| மதிப்பிறக்கம் | 65,052,052.73 | 68,698,468.17 |
| குத்தகைக் கூலி | 232,613.64 | 232,613.64 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 4,757,373.66 | 5,735,956.05 |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | (739,121.26) | (1,124,471 |
| வருமானம் / இழப்பு அகற்றல் - நிலையான சொத்துக்கள் | 190,072.44 | - |
| ஐயக் கடன் ஒதுக்கீடுகள் | 929,405.02 | (229,670.79) |
| பல்வேறுபட்ட வருமானங்கள் | (24,428,316.87) | (29,977,186.24) |
| முன்னைய வருட சரிசெய்கைகள் | | (38,597,560.15) |
| **மூலதன மாற்றீடுகளுக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம் (நட்டம்)** | **39,316,405.79** | **(15,646,607.20)** |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்பு (குறைவு) | (14,586,653.33) | 24,916,036.21 |
| வேறு நடைமுறை சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைப்பு | (22,167,863.54) | 25,436,911.70 |
| **செயற்பாட்டின் மூலம் ஈட்டப்பட்ட பணம்** | **2,561,888.92** | **34,706,340.71** |
| பணிக்கொடை கொடுப்பனவு | (2,709,817.50) | (4,298,790.00) |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட நிகர பணம்** | **(147,928.58)** | **30,407,550.71** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பணப்புழக்கம்** | | |
| பொறிகளினதும், உபகரணங்களினதும் கொள்வனவு | (64,583,433.79) | (36,364,782.13) |
| பொறிகளினதும், உபகரணங்களினதும் விற்பனையிலிருந்து வரும்படிகள் | 421,462.36 | 108424.2 |
| வருமானம் / இழப்பு அகற்றல் - நிலையான சொத்துக்கள் | (190072.44) | |
| வட்டி வருமானம் திறைசேரி உண்டியல்கள் | 739121.26 | 1215999.95 |
| முதலீடு - திறைசேரி உண்டியல்கள் (தேய்மான நிதி) | 15707803 | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | (47,905,119.61) | (35,040,357.98) |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| திறைசேரி உதவுதொகை | 133,215,000.00 | 62,900,000.00 |
| நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம் | 133,215,000.00 | 62,900,000.00 |
| **பணத்திலும், பண சமப்படுத்தல்களிலும் நிகர பண அதிகரிப்பு (குறைப்பு)** | **85161,951.81** | **58,267,192.73** |
| **காலத்தின் ஆரம்பத்தில் பணமும், பணச் சமப்படுத்தல்களும்** | **64,105,008.89** | **5,837,816.16** |
| **காலத்தின் இறுதியில் பணமும், பணச் சமப்படுத்தல்களும்** | **149,266,960.70** | **64,105,008.89** |

| கணக்கு குறியீடு | விவரணம் | குறிப்பு | 2015 ரூபா | 201 ரூபா |
|---|---|---|---|---|
| | குறிப்பு 1 | | | |
| | **வங்கியில் காசு மீதி** | | | |
| 680 | இலங்கை வங்கி, டொரிங்டன் -CIDA HO | | 34,112,875.01 | |
| 681 | இலங்கை வங்கி, டொரிங்டன் - CIDA OTC | | 63,260,004.66 | |
| 682 | இலங்கை வங்கி, பெலவத்தை - CIDA CETRAC | | 50,065,698.03 | - |
| 683 | இலங்கை வங்கி, டொரிங்டன் - CIDA Fund | | 98,500.00 | |
| 684 | இலங்கை வங்கி, கொள்ளுப்பிட்டிக் கணக்கு | | - | 3,671,357.92 |
| 685 | இலங்கை வங்கி, பத்தரமுல்ல(CETRAC) | | - | 27,572,655.44 |
| 686 | இலங்கை வங்கி, டொரிங்டன் | | - | 1,884,506.30 |
| | | | **145,537,077.70** | **33,128,519.66** |
| 694 | காசு கையிருப்பு - பெலவத்த | | | 17,400.00 |
| 691 | கையிலுள்ள பணம் (H/O) | | | 3,092,490.68 |
| 697 | கையிலுள்ள காசு டொரிங்டன் -CIDA HO | | 1,444,727.80 | |
| 699 | கையிலுள்ள காசு பெலவத்தை - CIDA CETRAC | | 282,500.00 | |
| | | | **1,727,227.80** | **3,109,890.68** |
| 693 | கையிலுள்ள பணம (OTC.) | | | 27,863,943.35 |
| 692B | சில்லறைப் பண கட்டுநிதி | 10 | 2,655.20 | 2,655.20 |
| | | | **2,655.20** | **27,866,598.55** |
| | | | **149,266,960.70** | **64,105,008.89** |
| | குறிப்பு 2 | | | |
| | **முதலீடுகள்** | | - | |
| 551 | திறைசேரி உண்டியல்கள் (மதிப்பிறக்க நிதியம்) | 11 | - | 15,707,803.20 |
| | | | **-** | **15,707,803.20** |

| கணக்கு குறியீடு | விவரணம் | குறிப்பு இல | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|---|
| | குறிப்பு 3 | | | |
| | **வியாபரமும் ஏனைய வரும்படிகளும்** | | | |
| | **கடன்தருனர்கள்** | | | |
| | கடன்தருனர்கள் கட்டுப்பாடு | | | |
| 620a | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-HO | 11 | 220,458.75 | 645,058.75 |
| 627a | கடன்தருனர்கள் கட்டுப்பாடு– HO CIDA | 11 | 1,966,590.00 | - |
| 627b | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-CHPD | 12 | 1,474,238.17 | 565,225.03 |
| 620c | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-CETRAC | 13 | 1,192,498.00 | 4,086,652.56 |
| 627c | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-CETRAC | 13 | 1,636,121.50 | |
| 620d | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-OTC | 14 | 1,553,965.51 | 6,576,206.28 |
| 627d | கடன்தருனர்கள் கட்டுப்பாடு-OTC | 14 | 574,124.25 | |
| 621 | கடன்தருனர் தீர்வைகள A/C | 15 | 5,298,287.88 | 5,298,287.88 |
| 623 | கிடைக்க வேணடிய சுகாதாரக் காப்புறுதி | | - | 784,066.60 |
| 624 | கிடைக்க வேணடிய திறைசேரி மானியம் | | 39,338,592.53 | |
| 634 | கிடைக்க வேண்டிய வருமானம் ஒப்பந்ததாரர் பதிவு | 16 | 1,547,706.51 | 1,111,573.13 |
| 625 | கிடைக்க வேணடிய சம்பள நிலுவைகள் | | - | 76,960.90 |
| 642 | சில்லறைக் கடன்தருனர்கள் | 17 | 115,315,277.56 | 115,401,553.26 |
| 648 | Vat வரும்படிகள் | 18 | 239,463.05 | 82,456.24 |
| | | | **170,357,323.71** | **134,628,040.63** |
| | **வைப்புக்கள்** | | | |
| 632 | சேவைகளுக்கான வைப்புக்கள் | 19 | 218,296.00 | 480,966.70 |
| | | | **218,296.00** | **480,966.70** |
| | **முற்பணங்கள்** | | | |
| 628 | விநியோகஸ்தர்களுக்கான முற்பணங்கள | 20 | 472,798.77 | 381,907.48 |
| 629 | சேவைக்கான முற்பணங்கள் | 21 | 307,239.50 | 10,139.50 |
| 656 | பொது முற்பணங்கள் | 22 | 490,605.00 | 214,615.00 |
| 662 | சம்பள முற்பணங்கள் | 23 | 61,000.00 | |
| 671 | பயிற்சித் திட்டங்களுக்கான முற்பணங்கள் | 24 | 20,930.00 | 80,405.00 |
| 672 | தர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான முற்பணங்கள | 25 | 100,000.00 | 100,000.00 |
| | | | **1,452,573.27** | **787,066.98** |
| | **பணியாளர் கடன்தருனர்கள்** | | | |
| 650 | பண்டிகை கால முற்பணங்கள் | 26 | 47,534.70 | 222,534.70 |
| 652 | பிரயாண முற்பணங்கள் | 27 | 3,425.00 | 3,425.00 |
| 654 | எரிபொருள் முற்பணங்கள் | 28 | 20,040.00 | 41,030.00 |
| 658 | இடுக்கன் கடன் | 29 | 5,060,810.16 | 4,472,819.00 |
| 659 | நூல் கடன் | 30 | 800.00 | 1,000.00 |
| | | | **5,132,609.86** | **4,740,808.70** |
| | | | 177,160,802.84 | 140,636,883.01 |
| 679 | சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாடு | | (120,916,808.16) | (119,987,403.14) |
| | | | **56,243,994.68** | **20,649,479.87** |
| | குறிப்பு 4 | | | |
| | **கையிருப்பு** | | | |
| 1120 | கையிருப்பு (OTC) | 31 | 42,154,966.68 | 46,799,773.07 |
| | | 32 | | |
| 1120 | கையிருப்பு(CETRAC) | | 82,287,564.85 | 82,249,187.37 |
| 1120 | கையிருப்பு (தலைமையலுவலகம்) | 33 | 8,669,161.05 | 9,717,809.97 |
| | | | **133,111,692.58** | **138,766,770.41** |

| | ஆதனம் பொறி உபகரணங்கள் | அட்டவணை | ஆகு செலவு | மேலதிகம் | அகற்றல் மற்றும் அழித்தல் | மொத்தச் செலவு | பெறுமாணத் தேய்வு | ஒன்றுதிரட்டிய பெறுமாணத் தேய்வு | எழுதப்பட்ட பெறுமதி வருட இறுதியில் | எழுதப்பட்ட பெறுமதி வருட இறுதியில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க/கு | குறிப்பு 5 | இல. | 01/01/2015 | 2015 | | 31.12.2015 | 2015 | | 31.12.2015 | 31/12/2014 |
| | | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| 500 | காணி | | 77,000.50 | - | | 77,000.50 | | | 77,000.50 | 77,000.50 |
| 502 | கட்டடங்கள் | 1 | | | | | | | | |
| | கட்டடங்கள் மீள் மதிப்பு1 | | 595,725,000.00 | | | 595,725,000.00 | 14,893,125.00 | 14,893,125.00 | 580,831,875.00 | 595,725,000.00 |
| | கட்டடங்கள் 11 | | 25,297,763.41 | | | 25,297,763.41 | 632,444.09 | 632,444.09 | 24,665,319.32 | 25,297,763.41 |
| 503B | கட்டடங்கள் மேம்படுத்தல் | 2 | 1,381,815.10 | - | | 1,381,815.10 | 34,545.38 | 34,545.38 | 1,347,269.72 | 1381815.10 |
| 504 | மோட்டார் வாகனங்கள் | 3 | 57,540,625.95 | - | - | 57,540,625.95 | 7,192,578.13 | 7,192,578.13 | 50,348,047.82 | 57,540,625.95 |
| 506 | மரத் தளபாடங்கள், பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் | 4 | 56,794,801.38 | 11,807,462.09 | (290,399.86) | 68,311,863.61 | 11,816,584.01 | 11,816,584.01 | 56,495,279.60 | 56,794,801.38 |
| 508 | பொறிகளும் உபகரணங்களும் | 5 | 172,910,977.14 | 51,200,000.00 | - | 224,110,977.14 | 25,387,844.74 | 25,387,844.74 | 198,723,132.40 | 172,910,977.14 |
| 509 | கட்புல உபகரணங்கள் | 6 | 4,251,259.58 | 79,390.00 | (131,062.50) | 4,199,587.08 | 1,066,749.45 | 1,066,749.45 | 3,132,837.63 | 4,251,259.58 |
| 510 | கருவிகள், செய்கருவிகள் | 7 | 17,833,504.76 | 1,461,761.70 | - | 19,295,266.46 | 3,627,543.63 | 3,627,543.63 | 15,667,722.83 | 17,833,504.76 |
| 1124 | நூலக புத்தகங்கள் - தலைமையகம் | 8 | 1,216,921.48 | 34,820.00 | - | 1,251,741.48 | 243,384.30 | 243,384.30 | 1,008,357.18 | 1,216,921.48 |
| 1122 | நூலக புத்தகங்கள் - CETRAC | 9 | 786,270.00 | - | | 786,270.00 | 157,254.00 | 157,254.00 | 629,016.00 | 786,270.00 |
| | | | | - | | | - | - | | |
| | | | **933,815,939.30** | **64,583,433.79** | **(421,462.36)** | **997,977,910.73** | **65,052,052.73** | **65,052,052.73** | **932,925,858.00** | 933,815,939.30 |
| 501 | இறையிலி காணி | | 2,851,477.20 | | | 2,851,477.20 | 232,613.64 | 232,613.64 | 2,618,863.56 | 2,851,477.20 |
| | | | | | | **1,000,829,387.93** | **65,284,666.37** | **65,284,666.37** | **935,544,721.56** | **936,667,416.50** |

| கணக்கு குறியீடு | விவரணம் | குறிப்பு இல | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|---|
| | குறிப்பு 6 | | | |
| | **கடன்வழங்குனர்கள், திரண்டவைகள்** | | | |
| 702 | முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் | 34 | 2,909,508.45 | 3,456,219.20 |
| 703 | ஒப்பந்த பதிவுகளுக்கு பெறப்பட்ட முற்பன வருமானம் | 35 | 40,645,751.55 | 44,073,965.02 |
| 704 | கொடுப்பனவுக்குரிய நிறுத்திவைத்தல் | 36 | 2,333,418.35 | 2,184,671.53 |
| 710 | கடன்வழங்குனர் கட்டுப்பாடு | 37 | 5,666,226.92 | 2,640,379.74 |
| 711 | சில்லறை கடன்வழங்குனர் | 38 | 16,697,532.75 | 29,551,848.08 |
| 714 | திரண்ட செலவினங்கள் | 39 | 9,813,869.52 | 10,597,227.98 |
| 730 | கொடுப்பனவுக்குரிய E.P.F. | 40 | 1,789,747.28 | 1,808,593.11 |
| 732 | கொடுப்பனவுக்குரிய E.T.F. | 41 | 214,770.27 | 217,031.76 |
| 734 | முத்திரைத் தீர்வை | | 25.00 | - |
| 743 | கொடுக்க வேண்டிய வரி | | - | 13,067.00 |
| 706 | டென்டர் வைப்புக்கள் மீளளிப்பு | 42 | 317,500.00 | 432,000.00 |
| | | | **80,388,350.09** | **94,975,003.42** |
| | குறிப்பு 7 | | | |
| 715 | பணிக்கொடை செலுத்துவதற்கான ஒதுக்கீடு | 43 | | |
| | மீதி முன்கொண்டுவரப்பட்டது 01.01.2015 | | 59,743,932.55 | 58,306,766.50 |
| | பணிக்கொடை செலுத்தப்பட்டது - 2015 | | (2,709,817.50) | (4,298,790.00) |
| | பணிக்கொடை செலுத்தப்பட்டது - 2015 | | 4,757,373.66 | 5,735,956.05 |
| | | | **61,791,488.71** | **59,743,932.55** |
| | குறிப்பு 8 | | | |
| 816 | பல்லின வருமானங்கள் - திறைசேரி மானியங்கள் | | | |
| | 01.01.2015 ஆம் திகதி முன்கொண்டு வந்த மீதி | | 418,580,503.21 | 371,215,686.51 |
| | திறைசேரி மானியங்கள் - மூலதனம் - 2015 | | 133,215,000.00 | 62,900,000.00 |
| | அமைச்சிலிருந்து கிடைத்த சொத்துக்கள் | | - | 207,540.00 |
| | GIZ மானியங்கள் | | - | 14,234,462.94 |
| | பல்லின வருமானங்கள் - திறைசேரி மானியங்கள் - 2015 | | (24,428,316.87) | (29,977,186.24) |
| | | | **527,367,186.34** | **418,580,503.21** |
| | குறிப்பு 9 | | | |
| | **(ICTAD) இலிருந்து எடுக்கப்பட்ட நிகர சொத்துக்கள்** | | | |
| | பற்றாக்குறை கணக்கு மு.கொ. (ICTAD)இலிருந்து– (1992.06.09 – 2014.12.31) | | (124,457,252.83) | |
| | (ICTAD)கருத்திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட நிகர சொத்துக்கள் (1986.04.01 – 1992.06.09) | | 149,907,162.02 | |
| 812 | (ICTAD)கருத்திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட நிகர சொத்துக்கள் (1986.04.01 – 1992.06.09) | | - | 149,907,162.02 |
| | | | **25,449,909.19** | **149,907,162.02** |
| | குறிப்பு 10 | | | |
| 817 | **மீள் மதிப்பீடு – நிலையான சொத்துக்கள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் மீதி | | 625,744,563.49 | 259,369,929.03 |
| | மீள் மதிப்பீடு 2011 – (CETRAC நூலகப் புத்தகங்கள் குறைக்கப்பட்டன) | | - | 1,310,450.00 |
| | மீள் மதிப்பீடு 2011 – (CETRAC பொறிகள் மற்றும் ஆலைகள் - குறைக்கப்பட்டன) | | - | (1,662,554.42) |
| | மீள் மதிப்பீடு 2011 – (CHPB & CETRAC கட்டடங்கள்) | | - | 366,726,738.88 |
| | | | **625,744,563.49** | **625,744,563.49** |
| | குறிப்பு 11 | | | |
| 850 | **ஒன்றுசேர்க்கப்பட்ட நிதி** | | | |
| | வருட ஆரம்ப பற்றாக்குறை மீதி | | (124,457,252.83) | (171,320,042.01) |
| | சரிசெய்கைகள் | | - | 67,247,545.27 |
| | மு.கொ. பற்றாக்குறை மீதி 2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டன | | 124,457,252.83 | |
| | 2015 வருட மிகை (பற்றாக்குறை) | | (6,677,673.57) | (20,384,756.09) |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருட இறுதியில் மீதி 31.12.2015 | | (6,677,673.57) | (124,457,252.83) |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | குறிப்பு 12 | | |
| | **வருமானங்கள்** | | |
| 100 | கருத்திட்டங்களின் வருமானம் | - | 8,928,571.42 |
| 102 | பொறிவகைகளின் வாடகை | 1,656,555.23 | 13,124,396.00 |
| 103 | பழுதுபார்தத்ல் கட்டணங்கள் | 191,550.90 | 285,638.39 |
| 104 | கேட்போர்கூட, கருத்தரங்கு அறை வாடகை | 9,622,853.07 | 5,952,193.11 |
| 105 | தொழில் சோதிதத்ல வருமானம் | 91,925.00 | 116,500.00 |
| 106 | பயிற்சிநெறிக் கட்டணங்கள் | 47,993,763.00 | 50,220,037.00 |
| 108 | கருத்தரங்குகள் | 13,963,300.00 | 13,325,057.50 |
| 107 | சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர் பதிவு (C-11) | 9,351.36 | 30,558.00 |
| 109 | ஒப்பந்தக்காரர் சந்தா | 95,448,850.52 | 93,615,554.55 |
| 110 | வாடகை | 3,820,769.00 | 3,992,540.00 |
| 112 | வெளியீடுகளின் விற்பனை | 7,125,469.59 | 8,381,919.01 |
| 114 | கணினிகள் வாடகை | 1,035,622.52 | 390,464.26 |
| 115 | சுற்றுலா விடுதி | 420,151.00 | 314,000.00 |
| 128 | NVQ பயிற்சித் திட்டத்திலிருந்து வருமானம் | 4,000,000.00 | 3,000,000.00 |
| 135 | கும்மட்டம் திரீபு கட்டணங்கள் | 4,027,894.22 | 3,858,323.71 |
| 120 | உசாவுகைச் சேவைகள் | 220,000.00 | 709,892.86 |
| 124 | மத்தியஸ்த / தணிப்புக் கட்டணம் | 865,180.20 | 350,000.00 |
| 125 | கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகள் | 2,287,220.96 | 1,083,468.97 |
| 136 | ICTAD மத்தியஸ்தர் குழாம் | 80,345.25 | 45,000.00 |
| 137 | திறன் விருத்தி பயிற்சி நெறிகள் | 6,646,250.00 | |
| | | **199,507,051.82** | **207,724,114.78** |
| | குறிப்பு 13 | | |
| | வருமானத் தோற்றுவிப்புச் செயற்பாடுகளின் செலவினங்கள் | | |
| | **ஆளணியினர் வேதனாதிகள்** | | |
| 200 | சம்பளங்கள், வேதனாதிகள் | 43,077,506.97 | 49,881,575.81 |
| 201 | வாழ்க்கைச் செலவு படி | 16,793,784.65 | 15,875,714.47 |
| 203 | வரவு ஊக்குவிப்பு | 2,471,653.45 | 2,610,773.73 |
| 206 | தூசி படி | 148,900.00 | 158,850.00 |
| 208 | பதில்கடமைப் படி | 172,213.12 | 306,586.87 |
| 210 | வேறு படி | 28,795,996.69 | 2,229,387.41 |
| 220 | விடுமுறைச் சம்பளம், மேலதிகநேர வேலை | 4,321,310.74 | 4,388,637.22 |
| 220a | விடுமுறைச் சம்பளம், மேலதிகநேர வேலை | 1,878,935.49 | 4,012,435.91 |
| 224 | வாழ்க்கைத்தொழில் உறுப்புரிமைச் சந்தா | 71,331.20 | 36,136.60 |
| 226 | மிகையூதியக் கொடுப்பனவுகள் | 2,317,247.00 | 2,222,937.00 |
| 330 | E.P.F | 8,406,584.63 | 8,215,563.32 |
| 332 | E.T.F | 1,676,606.14 | 1,647,821.24 |
| 334 | பணிக்கொடை | 3,185,644.92 | 4,148,783.58 |
| 336 | ஒய்வூதியம் | 50,795.00 | 50,804.90 |
| | | **113,368,510.00** | **95,786,008.06** |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | **பயிற்சி செயற்பாடுகள்** | | |
| 360 | புலமைப்பரிசில் மற்றும் பயிற்சி (உள்நாடு) | 169,819.57 | 193,500.00 |
| 362 | புலமைப்பரிசில் மற்றும் பயிற்சி (வெளிநாடு) | 115,820.00 | 243,085.00 |
| 390 | உசாவலர்களுக்கான கட்டணங்கள், படிகள் | 411,400.00 | 4,425,717.74 |
| 392 | கற்பித்தல் பணியாளருக்கான கட்டணங்கள், படிகள் | 8,904,350.00 | 8,852,105.00 |
| 394 | ஆதரவுப் பணியாளருக்கான கட்டணங்கள், படிகள் | 389,550.00 | 81,900.00 |
| 396 | அபிவிருத்தி ஆகுசெலவு | 344,600.00 | 118,500.00 |
| 410 | பயிற்சி விடயதானம் | 102,171.38 | 162,182.10 |
| 412 | பயிற்சிக்கான உதிரிப்பாகங்கள் | 4,649,032.13 | 6,500,000.00 |
| 414 | பயிற்சிக்கான எரிபொருள் | 2,509,199.79 | 4,200,000.00 |
| 418 | கை செய்கருவிகள், சிறிய உபகரணங்கள் | 16,154.71 | 81,726.92 |
| 424 | பயிற்சியாளர்களுக்கான சீருடைகள் | 834,304.14 | 809,155.10 |
| 425 | பயிற்சிச் செயற்றிட்டத்திற்கான சிற்றுண்டிகள் | 6,734,397.00 | 6,669,887.00 |
| 439 | ஊழியர் நலன்புரி | 130,020.66 | |
| 440 | பயிற்சியாளர்களுக்கான படிகள் | 2,170,250.00 | 3,289,500.00 |
| 441 | விரிவுரை மண்டபக் கட்டணங்கள் | 117,358.64 | 1,346,407.33 |
| 443 | உபகரணங்களின் வாடகை | 37,200.00 | 112,349.00 |
| 445 | NVQ செலவுகள் | 4,000,000.00 | |
| 446 | திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,246,842.60 | |
| | | **34,882,470.62** | **37,086,015.19** |
| | **வேறு** | | |
| 344 | N.B.T. | 2,404,560.00 | 2,914,754.00 |
| 346 | பணியாளர்களுக்கான சீருடைகள் | 316,732.20 | 638,987.42 |
| 348 | பணியாளர்களுக்கான தேநீர் | 1,194,390.52 | 1,187,057.01 |
| 350 | சுகாதார காப்புறுதி | 708,584.26 | 769,978.24 |
| 351 | ஐயக் கடன்கள் | | 860,609.35 |
| 354 | வேறு | 1,150.00 | 15,050.00 |
| 369 | பொருட்காட்சி | 70,662.58 | 222,694.14 |
| 370 | விளம்பரப்படுத்தல், பிரச்சாரம் | 2,775,776.08 | 7,494,002.47 |
| 372 | கேளிக்கை | 460,613.00 | 1,741,891.00 |
| 373 | ஆசன படி | 1,734,000.00 | 2,705,883.00 |
| 383 | வேலைத்தள மேற்பார்வை கொடுப்பனவு | 620,000.00 | |
| 378 | பொதுவான காப்புறுதி | 88,539.75 | 65,936.18 |
| 379 | சேவைக் கட்டணங்கள் (ஒப்பந்தக்காரர்களின் பதிவுT C– 11) | | 45,000.00 |
| 380 | சட்ட, வாழ்க்கைத் தொழில் கட்டணங்கள் | 18,510.14 | 30,218.08 |
| 382 | உத்தரவுப்பத்திர கட்டணங்கள் | 41,346.00 | 182,551.76 |
| 384 | நானாவித செலவினங்கள் | 78,429.88 | 77,009.47 |
| 385 | வாடகை, சோலை வரிகள் | 176,160.00 | 240,606.00 |
| 388 | இடவசதி | **10,689,454.41** | **19,192,228.12** |
| | **வருமான தோற்றுவிப்பு செயற்பாடுகளின் மொத்தச் செலவினங்கள்** | **207,557,347.27** | **213,868,214.59** |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | **பிரயாணச் செலவுகள்** | | |
| 236 | பிரயாணம் (உள்நாடு) | 349,129.50 | 334,866.00 |
| 236a | பிரயாணம் (தோற்றுவிக்கப்பட்ட வருமானம்) | 193,680.50 | 1,296,202.50 |
| | | - | - |
| | | **542,810.00** | **1,631,068.50** |
| | **விநியோகங்கள் மற்றும் தேவைகள்** | | |
| 240 | புகைப்படப்பிரதியெடுத்தல் செலவினங்கள் | 1,185,114.25 | 2,155,995.09 |
| 242 | காகிதாதிகள் | 1,133,845.66 | 1,599,682.35 |
| 244 | அலுவலகத் தேவைகள் | 169,643.83 | 425,732.73 |
| 245 | இணையத்தள மூலமான ஒப்பந்ததாரர் பதிவுகள் | - | 166,143.46 |
| 246 | அச்சிடுதல், தட்டச்சிடுதல் மற்றும் மொழிபெயர்ப்பு | 1,531,669.70 | 1,822,910.32 |
| 248 | புத்தகங்களும், சஞ்சிகைகளும் | 205,304.96 | 305,846.40 |
| 249 | அகற்றல் மற்றும் அழித்தல் | 216,744.92 | 682,962.60 |
| 250 | கட்புல பாவனைக்குரியவை | 37,950.44 | 88,461.10 |
| 280 | காப்புறுதி ( சொத்துக்கள்) | 295,197.48 | 330,004.12 |
| | | **4,775,471.24** | **7,577,738.17** |
| | **பராமரிப்புச் செலவினம்** | | |
| 260 | கட்டிடம் | 2,686,498.28 | 5,013,138.23 |
| 262 | தளபாடம், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,107,902.54 | 1,181,710.96 |
| 264 | பயணிகள் வாகனங்கள் | 1,043,502.24 | 1,612,636.11 |
| 266 | வேறு வாகனங்கள் | 154,713.47 | 176,191.00 |
| 268 | பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 7,585,262.97 | 8,209,628.74 |
| 270 | கருவிகள், செய்கருவிகள் | 7,552.56 | 32,281.31 |
| 272 | பழுதுபார்ப்பும் முக்கிய பிறவும் | 23,375.50 | 2,015.00 |
| | | **12,608,807.56** | **16,227,601.35** |
| | **ஒப்பந்த சேவைகள்** | | |
| 290 | பிரயாணி வாகனங்களின் எரிபொருள், எண்ணெய், ஓட்டச் செலவினங்கள் | 3,894,777.62 | 3,379,814.32 |
| 292 | வேறு வாகனங்களின் எரிபொருள், எண்ணெய், ஓட்டச் செலவினங்கள் | 4,093,957.56 | 8,572,372.93 |
| 294 | வாடகை, வாடகை கட்டணம் (வாகனங்கள்) | 633,747.00 | 2,056,433.05 |
| 296 | தபால் கட்டணம் | 1,061,388.00 | 1,097,435.50 |
| 298 | தொலைபேசி | 764,569.01 | 1,039,422.85 |
| 299 | இன்டர்நெற் கட்டணம் | 503,425.78 | 198,257.70 |
| 306 | மின்சாரம் | 11,245,388.90 | 12,232,201.31 |
| 308 | நீர் வரி | 2,034,991.13 | 1,886,234.52 |
| 310 | சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் | 4,327,273.94 | 3,901,681.64 |
| 312 | பாதுகாவலர் சேவைகள் | 2,130,304.50 | 2,003,701.38 |
| | | **30,689,823.44** | **36,367,555.20** |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | குறிப்பு 14 | | |
| | **வேறு வருமானம்** | | |
| 116 | மீளளிக்க முடியாத கேள்வி கட்டணங்கள் | 194,163.05 | 108,638.32 |
| 118 | அபராதங்கள், மேலதிக கட்டணங்கள் மற்றும் வேறு | 33,071.25 | 18,475.00 |
| 111 | பல்வேறுபட்ட வருமானம் | 24,428,316.87 | 29,977,186.24 |
| 119 | வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | 739,121.26 | 1,124,471.79 |
| 122 | நானாவிதம் | 865,240.31 | 750,886.58 |
| 126 | நானாவித (அனுசரணைகள்) | 992,958.04 | 1,870,000.00 |
| 141 | நானாவித வருமானம் (VAT இன்றி) | 78,209.05 | 431,328.20 |
| 167 | ஒப்பந்தக்காரர்களுக்கான அடையாள அட்டை | 10,500.00 | 23,100.00 |
| 169 | நிர்மாணப் பணியாளர்களுக்கான அடையாள அட்டை | 290,750.00 | 242,600.00 |
| 329 | ICTAD தரச் சஞ்சிகை | 210,000.00 | 120,000.00 |
| 377 | ICTAD தர அபிவிருத்தி கருத்திட்டத்திலிருந்து வருமானம் | 5,151,000.00 | 4,762,142.86 |
| | | **32,993,329.83** | **39,428,828.99** |
| | குறிப்பு 15 | | |
| | **நிருவாகச் செலவினங்கள்** | | |
| | **ஆளணியினரின் வேதனாதிகள்** | | |
| 200 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 22,381,713.33 | 27,301,150.80 |
| 201 | வாழ்க்கைச் செலவு படி | 7,972,834.12 | 8,343,011.81 |
| 203 | வரவு ஊக்குவிப்பு | 1,182,397.26 | 1,426,001.55 |
| 208 | பதில் கடமைப் படி | 296,303.82 | 388,264.70 |
| 210 | வேறு படி | 12,781,063.70 | 233,790.00 |
| 220 | விடுமுறை கொடுப்பனவு, மேலதிக நேரவேலை | 4,083,364.94 | 4,121,262.00 |
| 220a | விடுமுறை கொடுப்பனவு, மேலதிக நேரவேலை | - | 140,926.44 |
| 224 | வாழ்க்கைத் தொழில் உறுப்புகளுக்கு உறுப்புரிமை சந்தா | 36,483.62 | 19,410.97 |
| 226 | மிகையூதியக் கொடுப்பனவுகள் | 1,112,139.00 | 1,187,397.00 |
| 330 | E.P.F | 4,337,384.50 | 4,382,468.15 |
| 332 | E.T.F | 872,187.63 | 809,003.20 |
| 334 | பணிக்கொடை | 1,633,153.74 | 1,587,172.47 |
| | | **56,689,025.66** | **49,939,859.09** |
| | **போக்குவரத்துச் செலவினங்கள** | | |
| 236 | போக்குவரத்து (உள்நாடு) | 340,137.25 | 457,698.50 |
| | | - | - |
| | | **340,137.25** | **457,698.50** |
| | **விநியோகங்கள் மற்றும் தேவைகள்** | | |
| 240 | புகைப்படப் பிரதியெடுத்தல் செலவினங்கள் | 1,222,071.98 | 754,026.06 |
| 242 | காகிதாதிகள் | 297,055.21 | 232,102.79 |
| 244 | அலுவலகத் தேவைகள் | 129,227.62 | 114,402.79 |
| 246 | அச்சிடுதல், தட்டச்சிடுதல், மொழிபெயர்த்தல் | 148,388.00 | 10,385.00 |
| 248 | நூல்கள் மற்றும் காலாந்திரிகள் | 427,239.11 | 213,220.00 |
| 249 | அகற்றலும் அழித்தலும் | | 170,866.01 |
| 250 | பாவனைக்குரிய கட்புலம் | 80,409.91 | 63,719.59 |
| 280 | காப்புறுதி (சொத்துக்கள்) | 650,843.80 | 389,703.59 |
| | | **2,955,235.63** | **1,948,425.83** |
| | **மொத்தம் - நிருவாகச் செலவினங்கள்** | **59,984,398.54** | **52,345,983.42** |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | குறிப்பு 16 | | |
| | **வேறு செலவினங்கள்** | | |
| | **பராமரிப்புச் செலவினம்** | | |
| 260 | கட்டிடம் | 2,225,868.14 | 5,530,751.16 |
| 262 | மரத்தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,122,115.08 | 1,051,149.52 |
| 264 | பிரயாணிகள் வாகனங்கள் | 2,863,124.82 | 2,752,963.28 |
| 268 | பொறி, பொறிவகைகள் மற்றும் உபகரணங்கள் | - | 9,609.50 |
| 272 | வேறு | 23,470.00 | |
| | | **6,234,578.04** | **9,344,473.46** |
| | **ஒப்பந்த சேவைகள்** | | |
| | | | - |
| 290 | பிரயாணிகள் வாகனங்களின் எரிபொருள், எண்ணெய் மற்றும் ஓட்டச் செலவினங்கள் | 2,444,344.15 | 5,001,029.73 |
| 294 | வாடகை மற்றும் கேள்வுக் கட்டணங்கள் (வாகனங்கள்) | 75,720.00 | 29,944.00 |
| 296 | தபால் கட்டணம் | 263,479.84 | 278,766.66 |
| 298 | தொலைபேசி | 950,416.64 | 830,755.08 |
| 299 | இன்டர்நெற் கட்டணங்கள் | 285,940.63 | 282,262.06 |
| 306 | மின்சாரம் | 4,431,029.71 | 5,091,448.93 |
| 308 | நீர் வரி | 312,321.33 | 369,436.56 |
| 310 | சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் | 1,430,026.19 | 1,393,583.48 |
| 312 | பாதுகாப்பு சேவைகள் | 219,679.88 | 539,668.89 |
| | | **10,412,958.37** | **13,816,895.39** |
| | **பயிற்சி செயற்பாடுகள்** | | |
| 360 | புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி (உள்நாடு) | 264,655.43 | 174,000.00 |
| 362 | புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி (வெளிநாடு) | 55,387.40 | 33,875.00 |
| 390 | ஆலோசகர்களுக்கான கட்டணங்கள் கொடுப்பனவுகள் | - | |
| 394 | உதவி ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் | 4,750.00 | |
| 410 | பயிற்சி விடயதானங்கள் | - | 2,016.23 |
| 416 | பயிற்சி உதவிகள் | | 420.00 |
| 428 | விசேட வேலைகளுக்கான செலவுகள் | | 92,000.00 |
| 440 | பயிற்சிப் படிகள் | 575,600.00 | 911,632.27 |
| 441 | மண்டப கூலி | 116,868.93 | |
| 443 | உபகரணங்கள் வாடகை | | 4,113.00 |
| | | **1,017,261.76** | **1,218,056.50** |

| கணக்கு குறியீடு | விவரணம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | **வேறு** | | |
| 123 | இலாபம் நட்டம் நிலையான சொத்துக்கள் அகற்றல் | 190,072.44 | - |
| 344 | N.B.T. | 116,841.00 | 90,414.00 |
| 346 | பணியாளருக்கான சீருடைகள் | 255,111.17 | 353,203.62 |
| 348 | பணியாளருக்கான தேநீர் | 527,359.00 | 526,287.00 |
| 350 | சுகாதார காப்புறுதி | 460,928.59 | 714,896.18 |
| 354 | ஏனையவை | 4,300.00 | 9,050.00 |
| 369 | பொருட்காட்சி | 39,120.25 | 149,399.50 |
| 370 | விளம்பரப்படுத்தல் மற்றும் பிரச்சாரம் | 819,577.37 | 2,435,773.96 |
| 372 | கேளிக்கை | 386,126.00 | 573,775.00 |
| 373 | ஆசன படி | 614,650.00 | 224,900.00 |
| 374 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 120,500.00 | 189,999.64 |
| 378 | காப்புறுதி பொது | 3,643.92 | 3,258.98 |
| 380 | சட்ட மற்றும் வாழ்க்கைத்தொழில் கட்டணங்கள | 34,840.00 | 26,551.00 |
| 382 | உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள் | 205,586.47 | 215,004.40 |
| 384 | நானாவிதச் செலவினங்கள் | 48,977.56 | 13,625.23 |
| 385 | வாடகை மற்றும் அறவீடுகள் | 1,852.35 | 4,082.07 |
| 388 | தங்குமிடவசதி | | 68,600.00 |
| | | **3,829,486.12** | **5,598,820.58** |
| | **மொத்தம் - வேறு செலவினங்கள்** | **21,494,284.29** | **29,978,245.93** |
| | குறிப்பு 17 | | |
| | பெறுமானத் தேய்வு | | |
| 282 | பெறுமானத் தேய்வு | 24,428,316.87 | 29,977,186.24 |
| | மூலதன மானியங்கள் | 40,623,735.86 | 38,721,281.93 |
| | வேறு | | |
| 283 | குத்தகைக் கூலி | | |
| | தலைமை அலுவலகம் | 200,000.00 | 200,000.00 |
| | CHPB | 32,613.64 | 32,613.64 |
| | | **65,284,666.37** | **68,931,081.81** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } சீஈஎன்/பீ/சீஐடிஏ/எவ்ஏ/15   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2016 செப்தெம்பர் 22

தலைவர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

**நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (சீஐடிஏ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (சீஐடிஏ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச தொழில்துறை கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

AGDSL
Auditor General's Department

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (சீஐடிஏ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்

எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 01 – **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:** மதியுரை மற்றும் வழக்குத் தீர்ப்பளித்தல் சேவைகளிலிருந்தான வருமானம் நிதிக்கூற்றுக்களிற்கு அட்டுறு அடிப்படையில் எடுத்துவரப்படுவதற்கு பதிலாக காசு அடிப்படையில் எடுத்துவரப்பட்டிருந்தமையால் இந்த சேவைகளிலிருந்தான பெறவேண்டிய வருமானம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு மதிப்பிடப்பட்டு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 133,111,692 தொகையான இருப்பு உருப்படிகளின் பேரேட்டு மீதிகள் அத்திகதியில் உள்ளவாறான இருப்பு மீதிகளுடன் பௌதீகரீதியாக சரிபார்த்து பெறுமதியிட்டு கொண்டுவருவதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம், 1,057 இருப்பு உருப்படிகள் மிகையானதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவற்றிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 2,179,600 மொத்தப் பெறுமதிக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,000,000 தொகையை மாத்திரம் அதிகாரசபை

மூலதனமாக்கியிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தேறிய சொத்துக்கள் ரூபா 179,600 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையால் ஊழியர்களின் சேவைகளை இடைநிறுத்தியமைக்காக ஊழியர்களால் அதிகாரசபைக்கு எதிராக தொடரப்பட்ட நான்கு சட்டரீதியான வழக்குகள் தொடர்பில் செலுத்த வேண்டியவைகளாக ரூபா 863,698 தொகை இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பில் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வயதுப்பகுப்பாய்வின் பிரகாரம், ரூபா 2,550,614 மற்றும் ரூபா 1,719,187 தொகையான நானாவிதக் கடன்கொடுத்தோர்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முறையே மூன்று வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(ஆ) 1997 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் பொறி மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக தேசிய உபகரணம் மற்றும் பொறி அமைப்பிடமிருந்து (என்ஈஎம்ஓ) பெறவேண்டிய ரூபா 114,529,393 தொகையானது 2015 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்படாதிருந்தது.

### 2.2.4 இனங்காணப்படாத வித்தியாசங்கள்

நிதிக்கூற்றுக்களிலும் உரிய பட்டோலையிலும் காட்டப்பட்ட வியாபார மீதிகள் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளுக்கிடையில் ரூபா 300,000 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 15,707,803 தொகை திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 14 (1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 20,384,756 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,677,674 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 13,707,082 ஆன முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான வருமானம் ரூபா 6,646,250 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமானம் உருவாக்கல் நடவடிக்கைகள் மீதான செலவினங்கள் ரூபா 6,310,868 ஆல் குறைவடைந்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்குப் பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 258 பதவியணியினரின் பயன்பாடு, ரூபா 1,316 மில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 223

மில்லியன் அரச பங்களிப்பு என்பவற்றிலிருந்து விளைந்த அதிகாரசபையின் தொழிற்பாட்டுப் பற்றாக்குறை ரூபா 6.6 மில்லியனாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் பற்றாக்குறை முன்னைய ஆண்டிற்கான மொத்தச் சொத்துக்களின் 1.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியமையால் 1.1 சதவீதம் சாதகமான நிலைமையினை சுட்டிக்காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அதிகாரசபையின் செயற்படுத்துனர் பயிற்சி நிலையம் (ஓரீசீ) மற்றும் நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (சீசாரீஆர்ஏசீ) என்பன மீளாய்வாண்டின் போது அவற்றின் இலக்கிடப்பட்ட உள்ளக வருமானங்களை அடையத் தவறியிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | இலக்கிடப்பட்ட வருமானம் | அடைந்தவை | இலக்கிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக அடைந்தவை |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| **செயற்படுத்துனர் பயிற்சி நிலையம்** | | | |
| - ஏனைய உபகரணம் மற்றும் இயந்திர செயற்படுத்துனர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான வருமானம் | 17.27 | 13.47 | 77.9 |
| - இயந்திர மற்றும் உபகரண வாடகை வருமானம் | 18.00 | 1.62 | 1.9 |

நிர்மாண உபகரண பயிற்சி நிலையம்

| | | | |
|---|---|---|---|
| - நிர்மாண உபகரண பயிற்சி வருமானம் | 16.55 | 8.31 | 50.2 |
| - செயலமர்வுகள், திருத்த வேலைகள் மற்றும் மதியுரை சேவை வருமானம் | 18.50 | 11.43 | 61.8 |

இது தொடர்பில் உயர்மட்ட முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தின் வருடாந்த அமுல்படுத்தல் திட்டத்தின் (சீஈரீஆர்ஏசீ) பிரகாரம், நிர்மாணத் தொழிலிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முகாமைத்துவ சேவைகளுடன் தொடர்புபட்ட நிர்மாணத்தை நிலையத்தின் முக்கிய செயற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் கேட்போர் கூடம் மற்றும் கருத்தரங்கு அறை என்பவற்றை வாடகைக்கு விட்டமைக்காக 2015 ஆம் ஆண்டின் போது சீஈரீஆர்ஏசீ ஆல் வருமானத்தின் பிரதான பகுதி உழைக்கப்பட்டிருந்தது.

(இ) மதியுரையாளரின் செயலாற்றலை அடிப்படையாகக்கொண்டு மூன்று தவணைகளில் செலுத்தப்படும் ரூபா 150,000 தொகையான ஒட்டுமொத்தக் கொடுப்பனவிற்காக மூன்று மாத காலப்பகுதியினுள் அதிகாரசபையின் மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்காக ஒதுக்கீட்டு அடிப்படையில் 2015 ஏப்ரல் 27 இல் மதியுரையாளரொருவரை அதிகாரசபை நியமித்திருந்தது. மேலும், 2015 யூலை 05 ஆம் திகதி பணிப்பாளரிற்கு (மனிதவளம்) பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் விபரங்களை (முன்மொழியப்பட்ட ஆவணத்தின் வரைபுப் பிரதி) மதியுரைஞர் சமர்ப்பித்திருந்ததுடன் 2015 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அவருக்கு ரூபா 50,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தின் இறுதிப் பிரதி 2016 மே மாத இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

Auditor General's Department

4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,663,659 வெளிநாட்டுதவி மீதியை பொதுத் திறைசேரிக்கு மீளளிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதிரி நிர்மாண வகைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல், தற்கால சூழலில் நவீன மற்றும் பாரம்பரிய கட்டிட மூலப்பொருட்கள் மற்றும் நுட்பங்களை பயன்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் நிர்மாணம் மீதான அறிவை மிளிர வைத்து வழங்குதல் என்பவற்றில் தேசிய சுற்றாடல் நிர்மாண தொழில்நுட்ப கருப்பொருள் பூங்கா விருத்திசெய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செயற்திட்டம் 2011 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பரில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டக்காலப்பகுதியின் போது ஐந்து மாதிரி வீடுகளை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும் நான்கு மாதிரி வீடுகள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் இரண்டு மாத்திரம் நிர்ணயித்த செயற்திட்டக்காலப்பகுதியினுள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மிகுதி மாதிரி வீடுகள் 2016 மே 31 வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்பட்ட மழைநீர் அகற்றும் முறைமையுடனான வீடுகளின் நிர்மாணம், வலு வினைத்திறன்களாக சூரிய மின்சக்தியின் ஆக்கபூர்வமான பயன்பாட்டினை காட்சிப்படுத்தல், மாதிரிக் காற்று மின்சார உற்பத்திப் பொறியினை ஸ்தாபித்தல், உலர் வலயப் பகுதிகளுக்கான நிலப் பாதைகளை நிர்மாணித்தல் போன்ற நடவடிக்கைகள் 2016 மே மாத இறுதியிலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கருப்பொருள் பூங்கா நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியின் உரிமையாண்மை தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

4.3 ஓய்வூதிய நலன்களிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 61,791,489 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எதிர்கால கடப்பாடுகளை எதிர்கொள்வதற்காக நிதியேற்பாட்டை முதலீடு செய்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

4.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2011 யூன் மாதத்திலிருந்து அதிகாரசபையால் பதிற்கடமை அடிப்படையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு உதவி உள்ளக கணக்காய்வாளரொருவர் மற்றும் முகாமைத்துவ உதவியாளரொருவர் ஆகிய இரண்டு அலுவலர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

4.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 6,677,674 பற்றாக்குறையொன்றாக இருந்த போதிலும் அதிகாரசபை அதன் பதவியணியினருக்கு வருடாந்த மிகையூதியத்தினை செலுத்தும் நோக்கத்திற்காக ரூபா 31,529,349 தேறியலாபமொன்றை காட்டுவதன் மூலம் அதே காலப்பகுதிக்கான தனியான வருமானக் கூற்றொன்றை தயாரித்திருந்தது. அதற்கிணங்க, 2015 திசெம்பர் 09 இன் 02/2015 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது அதன் பதவியணியினருக்கு ரூபா 2,317,245 தொகை வருடாந்த மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது.

4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 360 மற்றும் 258 ஆக இருந்தது. உள்ளகக் கணக்காய்வாளர், நிதிப் பணிப்பாளர், பிரதிச் செயற்பாட்டுப் பணிப்பாளர் (பயிற்சி நிலையம்) போன்ற நிறைவேற்று மட்டத்திலுள்ள பதினெட்டுப் பதவிகள் உள்ளடங்கலான 102 வெற்றிடங்களில் 27 வெற்றிடங்கள் அத்தகைய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமானளவு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல ஆண்டுகளாக பதிற்கடமை அடிப்படையிலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஒரு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள் | செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய மீதிகள் உரிய தரப்பினர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருமான முகாமைத்துவம் | தொடர்வரிசையின்றி அதிகாரசபையால் சிட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி